

நன்றி - நூலகத்திட்டம்



# எரிகிற வீட்டில்...



வடக்கு கிழக்கில் யுத்தம் ஆரம்பித்து ஓராண் டாகிறது. இந்த ஒரு வருட காலத்துள் பல யுத்த நிறுத்தங்கள் வந்து போயின.ஒவ்வொரு யுத்த நிறுத்தத்தின் போதும் எதிர்த்தரப்பினர் மீறினர் என்று குற்றஞ்சாட்டி தாம் திரும்பவும் யுத்தத்தை தொடர்வதை நியாயப்படுத்திக் கொள்வர் இரு தரப்பினரும். வெசாக் யுத்த நிறுத்தமும் இவ்வாறே ஆயிற்று.

யுத்தம் புலிகளுக்கெதிரானது எனத் திரும்பத் திரும்ப சலிப்பூட்டும் விதத்தில் அரசு சொல்லிக் கொண்டு கூடவே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சர்வகட்சி மாநாடு, திறந்த மனதுடனான பேச்சுவார்த்தை, தீர்வைத் தயாரிக்க திட்டவரைவுக் குழு, பின் திட்ட வரைவு முயற்சி எனச் சொல்லிக் கொண்ட போதும் வடக்கு - கிழக்கில் தொடர்ந்து படு கொலைகளையும்,யுத்தத்தையும் நடாத்த அனுமதித் திருப்பதும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்வது என்பது அரசின் சமாதான முயற் சிகள் பற்றிய பொய்ம்மைத் தனத்தை அப்பட் டமாக்கியுள்ளது.

சென்ற இதழில் நாம் குறிப்பிட்ட மட்டக்களப்பு தலைவெட்டு சம்பவங்களுக்கு இராணுவ குற்றவியல் பிரிவினரும், கிழக்கில் அரசுடன் இணைந்து வேலை செய்யும் ஒரு தமிழ்க் குழுவுமே காரணமாக இருந்தனவென்றும், புலிகளது அவர்கள் மீதான தாக்குதல் வெற்றியின் பின், இளம் பெண்கள் காணாமல் போய், பாலியல் வன்முறைக்கு உட்படுத் தப்பட்ட பின் தலையற்ற முண்டமாக காணப்படுவது இல்லாமற் போயுள்ளது என்றும் தெரியவருகிறது.

இவை ஒருபுறமிருக்க இந்த யுத்தத்தில் அரசால் தந்திரோபாயமாக உருவாக்கப்பட்ட முஸ்லிம் - தமிழ் பிரச்சினையும், அதற்குப் பலியான புலிகளின் முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல்களும் அப்பாவி, தமிழ், முஸ்லிம், மக்களை அவர்களது வாழ்விடங் களிலிருந்து விரட்டி அகதிகளாக்கியுள்ளது. குறிப்பாக கிழக்கின் பல முஸ்லிம் கிராமங்களில் முஸ்லிம் களுமில்லை, தமிழ்க் கிராமங்களில் தமிழர்களுமில்லை.

இந் நிலைமையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் என்றாற் போல் நடந்து கொள்கிறது, அரசு, குறிப்பாக திருமலை, அம்பாறை மாவட்டங்களில் தனது நீண்டகாலக் கொள்கையான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது.

திருமலை மாவட்டத்தில் குறிப்பாக மடத்தடி முள்ளிப் பொத்தானை, இறக்கண்டி, லிங்கநகர், 98ம் கட்டை போன்ற இடங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் யுத்தம் காரணமாக வெளியேறி அகதி முகாம்களிலிருக்க அவர்கள் வீடுகளில் சிங்களவர் அத்துமீறிக் குடி யேறியுள்ளனர் இக்குடியேற்றங்கள் பற்றி அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததுடன் மறைமுகமாக ஊக்குவிப்பதாகவும் தெரிகிறது. இது தவிர அரசு மற்றும், இந்துக் கோவில்களுக்குச் சொந் தமான காணிகளிலும் புதிய சிங்களக் குடியேற்றங்கள் தொடர்கின்றன.

இக் காணிப்பறிப்பு முஸ்லிம்களையும் விட்டுவைக் கவில்லை. உப்பு வெளியில் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதியிலிருந்த ஏறத்தாழ 60 முஸ்லிம் குடும்பங்களை வெளியேற்றி விட்டு அவர்களது காணிக்ளில் சிங்களவர்களைக் குடியேற்றும் முயற்சியும் தொடர்கிறது. இக் காணிகளில் மூன்றரை ஏக்கர் பௌத்த கோவிலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

"இந் நடவடிக்கைகளை உடன் நிறுத்துங்கள், அது சமாதான முயற்சியைக் கெடுக்கும்" என தமிழ் அரசியல் கட்சிகள் அரசைக் கேட்டுக் கொண்டபோதும் அரசு அது பற்றி அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

இதே போல் அம்பாறை மாவட்டத்திலும் வீரமுனைக் கிராமத்திலும், அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் யுத்தத்தினாலும், தமிழ் - முஸ்லிம் பிரச்சினையாலும் வெளியேறிய தமிழ் முஸ்லிம் கிராமங்களில் சிங்கள வர்களைக் குடியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள் ளப் பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இது தவிர நடந்து முடிந்த வெசாக்குடன் மலையகத்தில் ஹற்றன் சந்தியில் புத்தர் சிலையொன்று நிறுவப் பட்டுள்ளது. அரச மரத்தின் கீழ் புத்தர் முளைக்கும் அற்புதங்கள் அன்றைக்கு மட்டுமல்ல இன்றைக்கும் தான் போலும்.

இதேபோல் வல்லிபுரக் கோவில் பொற்சாசன மீள் கண்டுபிடிப்பும் அதற்கு அளிக்கப்படும் முக்கியத் துவமும் அது தொடர்பான ஆய்வு முயற்சிக்கான ஊக்கமும், வடக்கு கிழக்கு சிங்களவர்களது பாரம்பரிய பிரதேசமே என நிரூபிக்க அரசு முயல்கிறதா என எண்ண வைக்கிறது.

இந்நிகழ்ச்சிகள் எல்லாம் இலங்கை அரசின் அடிப்படையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்ப தையும், ஐக்கியம் சமாதானம் என்ற பேச்செல்லாம் பொய் வேசமே என்பதையும், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் தமிழ் மக்களை சிறுபான்மையிராக்கும் நோக்கத்துடன் அரசு தொடர் ந்து செயல்படுகிறது என்பதையும் அப் போக்கு முஸ்லிம்களையும் விட்டு வைக்கவில்லை என்பதையும் காட்டுகிறது.

தொடரும் இந்தப் போக்குகளை அரசு நிறுத்தாதவரை ஐக்கியம், சமாதானம் பற்றிப் பேசுவதிலோ, வரை வுக்குழு, சர்வகட்சி மாநாடு என மாநாடுகளை நடாத் துவதிலோ, எந்தவித அர்த்தப்பாடும் இருக்க முடியாது என்பது புறக்கணிக்க முடியாத ஓர் உண்மையாகும்.

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

# சரிநிகர்

இதழ் 9 | மே - ஜூன் 1991 | விலை ரூபா 5.00

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி

புதிதாகப் பத்திரிகைத்துறைக்குள் நுழைந்த நண்பர் ஒருவருக்கு திடீரென்று ஒரு இக்கட்டான நிலை தோன்றியதாம்.

அடிக்கடி என்னைச்சந்தித்துவந்த இந்த நண்பர் ஒருநாள் தனது அநுபவத்தை எனக்குச் சொன்னார்.

இந்திய அமைதிப்படையினர் வடக்குக் கிழக்கினை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த போது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த 'சுதந்திரமான' பத்திரிகைகளிலொன்றில் அவர் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்தார்.

பத்திரிகைக் காரியாலயம் அமைந்திருந்த வீதியின் ஓரமொன்றில் திடீரென ஆயுதங்களுடன் தோன்றிய இளைஞர்கள் சிலர் தாமே -சைக்கிளில் ஏற்றிவந்த ஒருவரைச் சுட்டுக் கொன்றனர். சுட்டவர்கள் சுடப்பட்டவரின் உயிர் போய்விட்டதா என்று பார்த்துத் தமது சந்தேகத்தைத் தீர்த்துவிட்டு போனதன் பின்னர் பின்னால் தயாராக எழுதப் பட்டநிலையில் எடுத்துவந்திருந்த மட்டைகளை அந்தக் கொல்லப்பட்டவரின் சடலத்தில் கட்டிவிட்டு இன்னுமிருவர் போனார்கள்.

சம்பவம் நடந்தது தான் தாமதம் அங்கிருந்த கடைகள் அனைத்தும் திடீரென அடித்துச் சாத்தப்பட்டன. சிலர் பூட்டிவிட்டு வெளியேறினார்கள். சிலர ஒற்றைக் கதவைத் திறந்தபடி என்னநடக்கிறது என்று பார்க்கும் ஆவலுடன் நின்றிருந்தார்கள் நண்பரும் ஓரமாக ஓரிடத்தில் நின்று கொண்டார். ஞாபகமாக தனது சட்டைப்பையில் அடையாள அட்டை பத்திரிகை அலுவலக அத்தாட்சிக் கடிதம் என்பன இருக்கிறதா எனச் சரிபார்த்துக் கொண்டார்.

சிறிது நேரத்தில் ஒரு ட்றக் வண்டி அவ்விடத்திக்கு வந்தது. அதிலிருந்து சில இந்திய ஜவான்கள் குதித்தார்கள். அவர்களின் பெரியவன் போலத் தெரிந்த ஒருவனும் இறங்கி வந்து சடலத்தைப் பார்வையிட்டான் பிறகு கடைக்காரர்களை நோக்கி நடந்து என்ன நடந்தது என்று ஆங்கிலத்தில் கேட்டான். வழமையான ஐ.பி.கே. எவ். ஆங்கிலம் போலல்லாமல் இது சரளமான சுத்தமான ஆங்கிலமாக இருந்தது.

எல்லோரும் அப்படி ஒரு சம்பவம் நடந்ததே அப்போது தான் தெரியும் என்பது போல்தான் நடந்து கொண்டார்கள். எனது நண்பர் ஒதுங்கிநின்ற கடைக்காரரிடமும் கேட்கப்பட்டது. அவரும் எனக்குத் தெரியாது, நான் உள்ளே அலுவலாக இருந்தேன் என்று சொன்னார்.

தன்னைக் கேட்டால் நடந்ததைச் சொல்லலாம் என நண்பர் யோசித்துக் கொண்டார். வந்தவர்கள் யாரென தெரியாது, ஆனால் இப்படித்தான் செய்தார்கள் என்று சொல்லலாம் என்று தான் தீர்மானித்துக் கொண்டார். ஆனால் அவர்கள் கேட்கவில்லை.

ஐ.பி.கே.எவ். ஜவான் போனபின் 'நீர் ஏன் உண்மையைச் சொல்லவில்லை' என்று கடைக்காரனைக் கேட்டார் நண்பர்.

'உனக்கென்ன பைத்தியமா?' என்பது போலகடைக்காரர் நண்பரைப் பார்த்து விநோதமாகச் சிரித்தார். 'சொன்னால் அவன் பிடித்துக் கொண்டே வைத்துக் கொண்டு வாறவை போறவைக்கு தலையாட்டச் சொல்லுவான் எனக்கு வேறை வேலையில்லையோ?' என்றார் பிறகு.

'சரி அப்படியானால் ஒரு மனிசன் சாகிறதைப் பற்றி நாங்கள் அக்கறைப்படத் தேவையில்லை, எங்களுக்கு எங்கடை அலுவல் தானா முக்கியம்?' என்று கேட்டார் நண்பர்.

மனிசர்தானே தினமும் சாகினம், அவன் சாக்காட்டிறதுகளுக்கு கணக்கில்லையோ? செத்தவன் ஏதாவது களவு கிளவு எடுத்திருப்பான் அல்லது ஏதாவது காட்டிக் குடுத்திருப்பான் என்றார் கடைக்காரர்.

நண்பருக்கு இந்தப் பதிலில் இருந்த அலட்சியம் சகிக்காமல் நேரே பத்திரிகை அலுவலகத்துக்குப் போய் நடந்ததை விறுவிறென்டு எழுதிக் கொடுத்துவிட்டு வீடுதிரும்பினார்.

யாரும் உண்மை சொல்லாததால் மறு அறிவித்தல் வரும்வரை கடைகளைத் திறக்கப்படாது என ஐ.பி.கே.எவ். உத்தரவிட்டதாம்.

மறுநாள் காலை பத்திரிகையில் செய்தி வரவில்லை. கடைகள் திறக்கப்படவில்லை என்றுமட்டும் ஒரு செய்தி வந்திருந்தது. அதற்கும் காரணம் இருக்கவில்லை.

தான் பத்திரிகையை விட்டுவிலகிவிடுவதாக தீர்மானித்துக் கொண்டார் நண்பர்.
இதைவிட பத்திரிகை நடத்தாமலே இருக்கலாம் என்பது அவரது அபிப்பிராயம்.

தனது இந்த முடிவுபற்றி இன்னொரு பத்திரிகை நண்பருடன் அவர் பேசினார். அந்தநண்பர் சொன்ன பதில்தான் இவரை இக்கட்டான நிலைக்குத் தள்ளியது.

அவர் சொன்னார், "உனக்குத் தேவை உத்தியோகமோ இல்லை வேறையேதுமோ? பத்திரிகையைப் படிச்சுத் தான் யாழ்ப்பாணச் சனம் செய்திகளை அறியுதெண்டு உனக்கு ஆர் சொன்னது?. சனத்துக்கு எது தேவையே அதை அது எப்பிடியோ அறிந்த கொள்ளும். பத்திரிகை அடிக்கிறது சனத்துக்கு நியூஸ் தேவை எண்டல்ல எங்களின்ரை தொழிலுக்கும் வேறை தேவைகளுக் காகவும் தான். நீ விலகினாப் போல் பேப்பரிலை எல்லா நியூசும் வந்திடுமே. அதோடை நீ விரும்பின உனக்கு தெரிஞ்ச உண்மையெல்லாம் எழுத இதென்ன ஆஸ்பத்திரிப்பின் பக்கச் சிவரே?".

இப்போது உண்மையில் அவருக்கு விலகுவதா இல்லையா என்று முடிவுகட்ட முடியாமல் போய்விட்டதாம்.

என்னிடம் வந்து கேட்டார், "பத்திரிகை நடத்திறதின்ரை நோக்கம் என்ன" என்று?

எனக்கும் மூளை குழம்பிப் போய் இருந்தது. ஒருபதிலும் தோன்றமல் மௌனமாய் இருந்தேன்.

திடீரென்று நண்பர் ஒருவர் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

பிறகு யோசித்துவிட்டு சொல்வதுபோல, "உனக்கு இது தெரியாதே ... எல்லாம் சனங்களைக் குழப்பத்தான்" என்றேன் நான்.

அதற்குப் பிறகு அவர் என்னைச் சந்திக்கவருவதில்லை●

## சிவரமணி



எமிலி டிக்கின்சன் எனும் அமெரிக்கப் பெண் கவிஞர், உலகில் வெறுப்புற்று மேல் மாடிப்படியிலுள்ள தன் அறைக்குட் சென்று கதவை மூடிக் கொண்ட போது கவிதைகள் நூற்றுக் கணக்காக வெளி வந்தன.
19 மே 1991 அன்று கவிஞரும் பெண்ணிலைவாதியுமான சிவரமணி யாழ்ப்பாணத்திலுள்ள தன் வீட்டின் நடு அறைக்குள் சென்று கதவைப் பூட்டிக் கொண்ட பின் தற்கொலை செய்து கொண்டார்; ஆத்மாநாம், சில்வியா பிளாத், மாயா கோவ்ஸ்கி வரிசையில் கவிதைக்கும் தற்கொலைக்கும் மேலும் ஒரு உறவு!
யாழ் பல்கலைக் கழக இறுதி வருட மாணவியான சிவரமணியின் மரணம் தமிழ்க் கவிதையின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒன்றின் உதிர்வாகும்!
1989 இற்குப் பிறகு தான் எழுதிய எல்லாக் கவிதைகளையும் தீயிலிட்டு விட்டுத் தானும் மறைந்த சிவரமணியின் கவிதைகள் சில 'சரிநிகர்' இவ்விதழில் இடம் பெறும்.

## கேவலப்பட்டவர் யார்?

கடந்த மார்ச் 29இல் கண்டியில் இந்து கலாசார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று நாள் அரச தமிழ் சாகித்திய விழா அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம அதிதியாகப் பங்குபற்றிய அமைச்சர் தொண்டமான் உரையாற்றும் போது "தேவராஜ் மாக்சிய வாதத்தைத் துறந்து கடந்த பதினைந்து ஆண்டுகளாக சமயவாதியாக மாறி வாழ்வதனால் தான் இன்று அமைச்சராகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார் இல்லையேல் நடேசனைப் போல் (இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்டகால உறுப்பினரும், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான மலையகத்தவர்) தெருவில் தான் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்" என்று கூறினார். இக்கூற்று பல்வேறு வாதப் பிரதி வாதங்களை கிளப்பி விட்டதை மிகவும் தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஒரு உண்மையான மாக்சிய வாதி சமயவாதியாக மாறமுடியுமா என்பது ஒரு கேள்வி, தேவராஜ் உண்மையிலேயே ஒரு சமயபக்தரா அல்லது தொண்டமான் பக்தராக வேடம் பூண்டுள்ளவரா என்பதும் முன்பு மாக்சிய அமைப்பில் செயற்பட்ட பொழுது உண்மையான நேர்மையான ஒரு மாக்சியவாதியாக செயற்பட்டாரா என்பதும் இன்னொரு கேள்வி. ஏன் நடேசனை விமர்சனம் செய்ய வேண்டிய தேவை ஒரு இலக்கிய விழாவில் கலந்து கொண்ட தொண்டமானுக்கு ஏற்பட்டது என்பது தான் மிக முக்கிய விடயமாக எனக்குத் தோன்றியது.

நடேசனும் தொண்டமானும் இரு வெவ்வேறு தோட்டத் தொழிற்சங்கங்களின் தலைவர்கள். ஆனால் நடேசனுக்கும் தொண்டமானுக்குமிடையில் பல வேறுபாடுகள் இருக்கின்றன. நடேசன் தனக்கென ஒரு உறுதியான கொள்கை நிலைப்பாட்டைக் கொண்ட தொழிற் சங்கவாதி. அறியாமையிலுள்ள தோட்டத் தொழிலாளிகளை அடக்கி ஒடுக்கி ஈவிரக்கமற்ற முறையிலே சுரண்டி கோடிக் கணக்கான ரூபாய்களைச் சேர்த்து குபேர வாழ்க்கை வாழும் தோட்ட முதலாளியல்ல. தோட்ட முதலாளியாக இருக்கும் அதே நேரத்தில், தொழிலாளி வர்க்கததையும் அவர்கள் சார்ந்த தமிழ் இனத்தையும் முதலாளித்துவ பேரினவாத அரசுக்கு அடகு வைத்து அவர்கள் வழங்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக மண்டியிட்டுக் கொண்டு மறுபுறத்தில் தனக்கு வழங்கப்பட்ட சலுகைகளை தமிழினத்துக்கு வழங்கப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகக் கூறி தொழிலாளர்களை ஏமாற்றி உயிர் வாழும் ஒரு மனிதருமல்ல. தொழிலாளர்களின் வர்க்க உணர்வுகளை மழுங்கடித்து அவர்களை விலை பொருளாக்கி சுயலாபம் தேடும் ஒரு தொழிற்சங்க வியாபாரியுமல்ல. பணபலத்தைக் கொண்டு தன்னை நிலைநாட்டிக்கொண்ட சந்தர்ப்பவாதியுமல்ல. மாறாக தன்னையே பொதுவாழ்விற்காக அர்ப்பணித்த ஒரு மனிதர்.

நடேசனைப்பற்றி விமர்சிக்க இவர்களுக்கு என்ன அருகதையிருக்கிறது? என்றார் ஒரு எழுத்தாளர். தொண்டமான் நடேசனைக் கேவலப்படுத்தும் நோக்குடன் அல்லது தன்னுடைய திறமைக்கும் தகுதிக்கும் ஒரு சாட்சியாக நினைத்து இப்படிப் பேசியிருக்கலாம். நிலைமைக்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ளக்கூடிய ஒரு சந்தர்ப்பவாதியாக தொண்டமான் அமைச்சர் தேவராஜ்யை இக்கூற்றிமூலம் இனம் காட்டியிருக்கிறார் இங்கு உண்மையிலேயே கேவலப்படுத்தப் பட்டவர் தேவராஜ் தான் நடேசன் அல்ல என்பது ஒரு உண்மையல்லவா? — டீ.

நன்றி - நூலகத்திட்டம்



**அரசதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றோரைக் கடத்தியிருக்கிறீர்கள். இவர்களைப் போலவே ஆபத்தான ஆபாச நடிகர்கள், அவதூறுப் பத்திரிகையாளர்கள் போன்றோரைக் கடத்தும் உத்தேசம் ஏதும் உண்டா?**

அப்படி ஒரு ஆலோசனையை நீங்கள் எங்களுக்கு வழங்குகிறீர்களா? (சிரிக்கிறார்) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் போன்றோர் அரசின் அங்கம். அவர்களைக் கடத்துவது அரசுக்கு எதிரான ஒரு சவால். நடிகர்கள் போன்றோர் அப்படியல்ல. அவர்கள் உங்களைக் கொல்லவில்லை, தாக்கவில்லை, பின் ஏன் நீங்கள் அவர்களைக் கடத்துகிறீர்கள் என்கிற மத்திய தர வர்க்க உளவியலை நாம் எதிர் கொள்ள வேண்டி வரும். கொல்வது எங்கள் நோக்கமல்ல. கடத்துவது எங்கள் தினசரி வேலையுமல்ல. கடத்திச் செல்லப்பட்டவர்களில் இதுவரை ஒருவர்தான் கொல்லப்பட்டுள்ளார்.

**அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டு இயக்கக் கூட்டமைப்பின் ஓரங்கமாய் ஜனநாட்டிய மண்டலி இருக்கிறது. கலாசார இயக்கங்களிடையே உலகளாவிய ஒரு புரிதலும் ஒத்துழைப்பும் இன்றைய தேவையாக இருக்கிறது மூன்றாம் உலக நாடுகளில் செயல்படுகிற இத்தகைய இயக்கங்களோடு இப்படிப்பட்ட ஒரு முயற்சியை ஜனநாட்டிய மண்டலியோ கூட்டமைப்போ செய்து வருகிறதா?**

ஒருங்கிணைப்பு என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல; அதற்கு நீண்ட காலம் ஆகும். ஒரு புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிதான் இதனைச் சாத்தியமாக்க முடியும்.

இத்தகைய முயற்சிக்கு இரண்டு அணுகுமுறைகள் உள்ளன. ஒரு கலைக் குழுவை உருவாக்கி விட்டு மற்ற இயக்கங்களுக்குக் கடிதம் போட்டு வாருங்கள் ஒன்றிணைவோம் எனக்கூப்பிடுவது ஒன்று. இது வெற்றி பெறாது என்றே நான் கருதுகிறேன். இரண்டாவது இத்தகைய பிறஇயக்கங்களிடமிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு நாம் அமைப்பு ரீதியாய்த் திரள்வது; நடவடிக்கைகளைமேற்கொள்வது. அதன் மூலம் ஒன்றிணைந்த இயக்கமொன்றைக் கட்டுவது. மாறாகக் கருத்தரங்குகள் நடத்தி அதில் அறிவு ஜீவிகளைக் கொண்டு கட்டுரைகள் வாசித்து இந்த ஒருங்கிணைப்பைச் செய்துவிட முடியாது.

இன்று எங்கள் பாடல்கள்யாவும் பிறமொழிகளில் பெயர்க்கப் பட்டுள்ளன. பரஸ்பரப் புரிதலுக்கு இது ஒரு வழி. மக்கள் கலை மன்றத்துடன் தமிழகம் பூராவும் சுற்றுப் பயணம் செய்கிறோம். அதன்மூலம் அந்தத் தோழர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறோம். தமிழகக் கலை வடிவங்கள், பாடல் வடிவங்கள் குறித்து எங்களுக்கு ஒரு புரிதல் கிடைத்திருக்கிறது. உங்களின் கதாகாலட்சேபம் ஒரு நல்ல வடிவம்.

இதே போல இந்தியா முழுமையும் சுற்றுப்பயணம் செய்யவும் பயிற்சி அளிக்கவும் திட்டம் வைத்திருக்கிறோம். அதற்கான ஒரு நல்ல பாடத் திட்டத்தையும் உருவாக்கியுள்ளோம். முதற்கட்டப்பயிற்சிக்கு மூன்றுநாட்கள் போதும். அரசியல் வகுப்பு ஒரு நாள்; எங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது மறுநாள்; செய்து காட்டுவது மூன்றாம் நாள். பத்துநாள் பயிற்சி முகாம் ஒன்றையும் தமிழகத்தில் நடத்துகிற திட்டமுண்டு. இந்தப் பத்தே நாட்களில் ஒரு நல்லபாடகரை வசன எழுத்தாளரை ஊருவாக்கி விட முடியும். அகில இந்தியக் கூட்டமைப்பைக் கட்டுவது என்பதுகூட இந்த வகையில்தான் சாத்தியம்.

**பாட்டாளி வர்க்கக் கலை வடிவங்கள் குறித்த புரட்சிகரக் கோட்பாடுகளை வகுத்த நாடகக் கலைஞர் ப்ரெக்டைப் படித்திருக்கிறீர்களா? காவிய நாடகம், அந்நியமாதல் உத்தி போன்ற அவரது நாடக உத்திகள் எதையும் நீங்கள் உணர்வு பூர்வமாகப் பயன்படுத்துகிறீர்களா? கலை என்பது புரட்சிகரமாய் இருப்பதற்கு அதன் உள்ளடக்கத்தை மாற்றினால் மட்டும் போதாது, அதன் வடிவத்தையும் மாற்றியாக வேண்டும். நமது ஆளும் வர்க்க வடிவங்களை அப்படியே பயன்படுத்துவது என்பதைக் காட்டிலும் அதில் புரட்சிகர மாற்றங்கள் செய்தாக வேண்டும் என்றெல்லாம் ப்ரெக்ட் சொல்கிறார். இது பற்றி உங்கள் கருத்தென்ன? அத்தகைய வடிவ மாற்றங்கள் எதையும் நீங்கள் செய்திருக்கிறீர்களா?**

ப்ரெக்டின் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. ஆனால் அவரது படைப்புக்கள் எல்லாவற்றையும் நான் முழுமையாகப் படித்து விட்டேன் என்று சொல்ல முடியாது. இன்று எங்கள் நிகழ்ச்சியைப் பாருங்கள். இத்தகைய புரட்சிகர உத்திகளை நாங்கள் எப்படியெல்லாம் கையாள்கிறோம் என்பது குறித்து நீங்களே ஒரு முடிவுக்கு வரமுடியும்.

நாம் எந்தக் கருத்துக்களையும் மக்களுக்குப் பரிந்துரைக்கும் போது அதனை வெளிப்படையாக அவர்கள் முன் வைத்தாக வேண்டும். அவர்கள் கண்முன் அவர்களது வாழ்க்கை விரிந்து கிடக்கிறது. அதை நாம் மறுபடைப்புச் செய்து காட்டுவதுதான் கலை. அவ்வாறு மறுபடைப்புச் செய்யப்படுவதில் முக்கால்வாசி எதார்த்தமாகவும் மீதிப் புனைவியலாகவும் அமைய வேண்டும் அவர்களின் சொந்த வாழ்க்கையைக் கண்ணில் காணும் போதே, சொந்த வாழ்க்கையைக் காண முடியாத சில உண்மைகளையும் கண்டு கொள்கிறார்கள்.

பாரம்பரிய வடிவங்களை நாம் அப்படியே பயன்படுத்தி விடமுடியாது. வடிவத்தைப் புரட்சிகரமாய் மாற்ற வேண்டும் என்கிற ப்ரெக்டின் கருத்தில் எனக்கு முழு உடன்பாடு. எல்லாம் மாறி வருகிறது; வடிவம் மட்டும் ஏன் மாறாதிருக்க வேண்டும்? ஒரு குறிப்பிட்ட வடிவத்தைப் பயன்படுத்துவதால் புரட்சி வரும் என்றால் நான் நிச்சயமாய் அதைப் பயன்படுத்தியே தீருவேன்.

உள்ளடக்கம் பிரதானமானதுதான் என்றாலும் நான் வடிவம்குறித்தும் அதிகம் கவலை கொள்கிறேன். புர்ரகதா, பாங்க்ரா என்னும் பஞ்சாபி நடனம், அஸ்ஸாமிய மலை இசை எல்லாவற்றையும் நாங்கள் பயன்படுத்துகிறோம். ஆனாலும் எதையும் அப்படியே எடுத்துக் கொள்வதில்லை. நாங்கள் வடிவங்களை இப்படி மாற்றியமைப்பதைப் பார்த்துவிட்டுப் பாரதீய ஜனதா கட்சியினர் போன்ற சனாதனிகள் நாங்கள் பாரம்பரியக் கலைகளைச் சிதைப்பதாகக் கூச்சல் போடுகிறார்கள். நாங்கள் பாரம்பரிய வடிவத்தை மாற்றுவது உண்மையில் அவர்களது பிரச்சினையல்ல; அதன் மூலம் சொல்லப்படுகிற செய்திகளைப் பார்த்துவிட்டுத்தான் அவர்களுக்கு எங்கள் மீது ஆத்திரம்.

ப்ரெக்டையெல்லாம் ஆழமாகப் படிக்காமலேயே நடைமுறையில் கற்றுக் கொண்டு நாங்கள் நிகழ்த்துகிற கலை வடிவங்களைத் தேசிய நாடகப் பள்ளியினர் கண்டு வியந்திருக்கின்றனர்.

**மலையின மக்களின் உடையை மேடையில் நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். ஏகாதிபத்திய ஆதிக்கக் கலாசாரத்திற்கெதிரான ஒரு எதிர்ப்பாக நாங்கள் அதைக் கருதுகிறோம். இன்றைய சூழலிலோ இல்லை புரட்சிக்குப் பின்போ மலையினக் கலாசாரம் என்பது நமக்கான மாற்றுக் கலாசாரமாக இருந்து விட முடியும் என்றா கருதுகிறீர்கள்?**

முதலில் ஒன்றைச் சொல்ல வேண்டும். நாங்கள் பயன்படுத்துவது மலையின மக்களின் ஆடையல்ல. ஆடை உடுத்துவது மலையினக் கலாசாரமே அல்ல. ஆடை உடுத்துகிற அளவிற்கெல்லாம் அவர்கள் வசதியானவர்களல்ல.

ஆடையின் சமூகநோக்கம் என்ன? வெப்பம், தூசு, மழை ஆகியவற்றிலிருந்து காப்பதுதான். அழகுபடுத்திக் கொள்வது சமூக நோக்கமன்று. தமிழகத்தின் வெப்பச் சுழலுக்கு வேட்டி கட்டுவது வசதியாயிருக்கிறது. எனவே எல்லோரும் அதைக் க்ட்டிக் கொள்கிறீர்கள்.

கலை நிகழ்ச்சியின்போது பயன்படுத்தும் ஆடை என்பது நிகழ்வின் மூலம் சொல்லப்படும் செய்திக்கு வலிவு கூட்டுவதாக இருக்க வேண்டும்; அவ்வளவுதான். நாங்கள் இப்போது பயன்படுத்துகிற உடையை ஆரம்பத்தில் பயன்படுத்தியதில்லை. இதற்கும் ஒரு வரலாறு இருக்கிறது. தொடக்கத்தில் பேண்ட், சட்டை போட்டுக் கொண்டுதான் தோன்றினோம். நக்சல்பாரி இயக்க அனுபவம் எங்களுக்குப் பாடங்கள் கற்றுக் கொடுத்தது. மக்களிடம் போகும்போது நாம் எளிமையாக இருக்க வேண்டும். எனவே எளிய மக்களின் அன்றாட ஆடைமுறையைப் பயன்படுத்தத் தொடங்கினோம். வேட்டி கட்டிக்கொண்டோம். ஆடுவதற்கு வசதியாகப் பின் அதை வரிந்து கட்டிக் கொண்டோம். ஆடு மாடு மேய்ப்பவர்களை இழிவாகக் கருதுவது வழக்கம், தெலுங்கானாப் போராட்டத்தின் போது கலை முயற்சிகளில் அவர்களது ஆடைகளைப் பயன்படுத்தியுள்ளனர். நாங்களும் அதைப் பயன்படுத்தத் தொடங்கினோம். "கொங்கனி" எனப்படும் கம்பளி ஆடையைப் போர்த்துக் கொண்டு ஆடும்போது அதுதோளில் உராய்ந்து புண் ஏற்படுத்தியதால் அதை விட்டுவிட்டு இப்போது பயன்படுத்தும் போர்வையைப் பயன்படுத்தத் தொடங்கினோம். கொஞ்ச நாள் *முண்டாசு கட்டிக் கொண்டு ஆடினோம். பின்னர் செங்கொடியைக் கையில் கட்டிக் கொண்டோம். சமீபத்தில்தான் கோடரியைக் கையில் வைத்துக் கொண்டு ஆடத் தொடங்கியுள்ளேன். ஆந்திரத்தில் இதற்குக் கொஞ்சம் எதிர்ப்பு. 'இவன் மேடையிலேயே ஆயுதப்பிரச்சாரம் செய்கிறான்.

நாங்கள் பயன்படுத்தும் ஆடை எங்களை மக்களில் ஒருவனாக உணர வைக்கிறது அவ்வளவுதான்.

**உங்களது ஆதரவுத் தளம் என்பது மலையினப் பகுதிதான். எனவே அங்குள்ள மக்களைத் திரட்ட உங்களுக்கு மலையினக் கலை வடிவங்கள் பயன்படுகின்றன. இதே வடிவங்கள் உங்களுக்கு நகர்ப்புற மக்கள் மத்தியிலும் பயன்படுகிறதா? மகாராஷ்டிரத்தின் நகர்ப்புறங்களில் செயல்படும் 'அல்ஹான் நாட்டிய மஞ்சு' போன்ற அமைப்புக்கள் தெரு நாடகங்களை அதிகம் பயன்படுத்துகின்றன. நகர்ப்புறங்களுக்கென அப்படி ஏதும் தனி வடிவங்களைப் பயன்படுத்துகிறீர்களா?**

மலையினக் கலாசார வடிவம் என்பது எங்களின் கண்டுபிடிப்பல்ல. அவர்கள் பயன்படுத்தி வருவது அது. அவர்களது உற்பத்தி முறை தேங்கியிருப்பதால் அவர்களின் கலாசார வடிவங்களிலும் தேக்கம் இருக்கிறது. நாங்கள் அந்த வடிவங்களை எடுத்துக் கொண்டு அவற்றில் புதிய மாற்றங்களைச் செய்து (பாடிக் காட்டுகிறார்) மக்கள் முன் வைக்கிறோம். மலையின வடிவங்களையும் சமவெளி வடிவங்களையும் கலந்து பயன்படுத்துங்கள். இருதரப்பினருமே ரசிப்பார்கள்.

**ஜனநாட்டிய மண்டலி போன்ற ஒரு புரட்சிகர அமைப்பில்கூடப் பெண்கள் சம அளவில் பங்குபெறுவதில்லையே, இது ஏன்?**

ஆரம்பக் காலங்களில் கலைக் குழுக்களுக்கு பெண்கள் கிடைப்பது அரிதாகத்தான் இருந்தது. பெண்கள் ஆடுவது பாடுவதெல்லாம் இழிவு என்கிற பண்பாட்டு மதிப்பீடுகள் இதற்கு ஒரு காரணம். அடுத்துப் பெண்களால் மட்டுமே சாத்தியம் என்பதான வடிவங்கள் எதையும் நாங்கள் பயன்படுத்தாதது இன்னொரு குறை. மேலும் ஜனநாட்டிய மண்டலி ஒரு கலைக்குழு மட்டுமல்ல தினந்தோறும் அரசோடும் போலீசோடும் வாழ்வா சாவா போராட்டம் நடத்தி வரும் அமைப்பு இது. போலீஸ் கொடுமை, சித்திரவதை முதலியவற்றை எதிர்கொள்ளும் ஒரு வெளிப்படையான இயக்கத்தில் பெண்கள் சேர்வதிலுள்ள பிரச்சினையையும் நீங்கள் பார்க்க வேண்டும்.

அதோடு நீங்கள் ஏன் கலாசாரத் தளத்தில் மட்டும் பெண்களின் குறைவான பங்கேற்பைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள். எல்லாத் தளங்களிலும் பெண்களின் பங்கேற்பு குறைவாகத் தானே இருக்கிறது. மேலும் வெறும் பங்கேற்பு மட்டும் போதாது. அரசியல் ஈடுபாடே பிரதானம்.

→ பக் 6



# கலைகளும் அரசியலும்-2

கத்தாரின் பேட்டி.

நன்றி - நூலகத்திட்டம்



# கலாசார அரசியல்

இன்று நம்தேசம் வாழ்விழந்து கிடக்கிறது. அது கடந்த காலங்களில் சரியான சிந்தனாபூர்வமற்ற ஆயுத தளத்தில் மட்டுமே தன் பார்வையை செலுத்தி வந்தது. பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்த நிலையில் அகிம்சைப் போராட்டம் தொடுக்கப்பட்டு அதனிலும் பயன் அற்ற நிலை தோன்றிய போது ஆயுதப் போராட்டம் வெடித்தது. ஆனல் இன்று அவ் ஆயுதப் போராட்டமோ அடுத்தகட்ட பரிமாணத்தைப் பெறமுடியாமல் பலப்பரீட்சையில் திணறிப்போய் உள்ளது.

இத்தேங்கிய வாழ்விலிருந்து அடுத்த கட்ட வளர்நிலைப் போக்கை நோக்கிய நகர்வு இன்று இன்றியமையாதது. அவ்வாருயின் அது புறவயப்பட்ட மாற்றங்களோடு மட்டும் தன் காலத்தை கழிக்கப் போகிறதா அல்லது அகவியல் சார்ந்த சிந்தன முறையிலான மாற்றத்தை நோக்கி அடிஎடுத்து வைக்கப் போகிறதா என்பது முக்கிய கேள்வியாக உள்ளது.*

நமது அடிப்படை சிந்தன முறையில் ஏற்படும் மாற்றம் என்பது சமூகவியல் சார்ந்ததொன்ருகும். எனவே இது அரசியல் பொருளாதார மாற்றங்களோடு மட்டும் தன்னைக் குறுக்கிக் கொள்ளாமல் சமூக விருத்தியின்பாலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

இங்கு இந்தியாவின் ஜனநாட்டிய மண்டலியின் பிதாமகரான கர்தாரின் கருத்து குறிப்பிடத்தக்கது "பொருளாதார அடித்தளத்தின் பிரதிபலிப்புத்தான் கலாசாரம் எனினும் வெறும் பொருளாதார மாற்றமே கலாசார மாற்றத்தை ஏற்படுத்துவது இல்லை. மக்களின் சிந்தனை புரட்சிகரமாக மாற்றப் படாவிட்டால் பொருளாதார மாற்றம் இருந்தும் கூட பின்னேக்கிய சரிவு சாத்தியம்".

ஏனெனில் கலாசாரம் என்பது பரந்துபட்ட மக்களின் சிந்தனையை உணர்வு பூர்வமாக துளைக்கும் பிரதானமானதும் இலகுவானதுமான ஊடகமாக விளங்குகிறது. இதனுல்தான் மக்களை அடக்கி ஒடுக்கும் கருவிகளான அரசும் ஆயுதக் குழுக்களும் பண்பாட்டுத்தளத்தினை திட்டமிட்டு உடைத்து எறிவதிலும் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்து இருப்பதிலும் கூடிய கவனம் செலுத்துகின்றன. இதற்கு சிறந்த உதாரணங்களாக இலங்கை அரசு தொல்பொருல் ஆய்வு நடவடிக்கைளையும் ஆவணக் காப்பகங்களையும் தமது பூரணகட்டுப்பாட்டில் வைத்து இருப்பதும் யாழ்நூல்நிலையத்தை திட்டமிட்டு எரித்ததையும் குறிப்பிட முடியும். எனவேதான் எமது செயற்பாட்டினை கலாசாரதளத்திற்கும் விரிவுபடுத்துவது அவசியம் ஆகும்.

இலங்கையை பொறுத்தவரை அது மூன்றாம் உலக நாடுகளுக்கே உரித்தான சமூகபண்பாட்டு சூழலினைக் கொண்டு விளங்குகிறது. பல்வேறு இனக் குழுமங்கள் வாழும் இந்நாட்டில் வறுமை ஒரு புறம் இனங்களுக்கிடையிலான மோதல் மறுபுறமுமாக உள்ளன. இவற்றிற்கு பிறகாரணிகள் எவ்வாறு துணைபுரிகின்றனவோ அவ்வாறே கலாசார தளங்களுக்கிடையிலான தெளிவற்ற மோதல்களும் துணைபுரிகின்றன.

இலங்கையின் பௌதீக பண்பாட்டு காரணிகளின் செல்வாக்கானது புராதன காலத்தில் இருந்து இன்றை வரையிலான அந்நியப் படை எடுப்புகளுக்கு காரணமாயின. இவற்றின் காரணமாக இலங்கைக்கே உரித்தான பொதுவான கலாசார வளர்ச்சியோ அல்லது அங்குவாழும் இனக் குழுமங்களுக்கு உரித்தான தனித்துவ கலாசார வளர்ச்சியோ ஏற்படாமல் பல நாடுகளின் கலப்பு கலாசார வளர்சிக்கு உட்பட்டது. குறிப்பாக 1500ற்கு பின் ஏற்பட்ட மேற்கத்தைய படை எடுப்புகளின் விளைவாக எல்லாக் குழுமங்களிடையேயும் போத்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானிய கலாசார பாதிப்புகள் ஏற்பட்டன. இதனை காலனித்துவ கலாசார தொற்றல் எனலாம்.

இந்நிலைமை 2ம் உலக மகாயுத்தத்தின் பின் 3ம் உலக நாடுகளில் ஏற்பட்ட தேசத்திற்கான தேசியத்திற்கான கோரிக்கைகளுடன் காலனிய விடுதலைகளுடன் சற்று புதிய வடிவத்தினைப் பெற்றது. இவ்வகையில் இலங்கையிலும் ஒவ்வொரு இனக் குழுமங்களும் தத்தமக்கு உரிய கலாசார தளங்களை ஆய்வுக்கு உட்படுத்தி வளர்த்தெடுக்கமுனைந்தன.

குறிப்பாக 1956களுக்கு பின் தென் பகுதியில் ஏற்பட்ட கலாசார விழிப்புவுணர்களும் பாரம்பரிய கலைகளைப் பேணுவதில் ஏற்பட்ட மறுமலர்சியும் 58-60களுக்கு பின் வடக்கு கிழக்கு பகுதிகளில் பாரம்பரிய கலைகளைப் பேண எடுத்த முயற்சியும் பிரதான திருப்பு முனைப் புள்ளியாக அமைகின்றன.

இவ்வளர் நிலையின் தொடர் விளைவாக 71ம் ஆண்டை அண்மித்த காலப்பகுதிகளில் தீவிரமாக பரவி வந்த இடது சாரிக் கருத்துக்களும் புரட்சியின் விளைவுகளும் தென் பகுதியில் புரட்சிகர கலை இலக்கியங்களின் தோற்றத்திற்கு காரணமாக விளங்கின.

இதனை அண்மித்தகாலகட்டங்களில் வடகிழக்குப் பகுதிகளில் சமுதாய பிரக்ஞைகளை வெளிக்கொண்டுவரும் படைப்புக்கள் வெளிவந்தனவாயினும் 1983ற்கு பிற்பட்ட காலப்பகுதிகளிலேயே தமிழ் மக்களின் ஒட்டுமொத்த கலைப்பரப்பு புதிய அரசியல் பெறுமானத்தைப் பெற்றது.

இக்காலப் பகுதிகளில் வெளிப்பட்ட கலை இலக்கிய போக்குகளை பிரதானமாக மூவகைப் படுத்தலாம்.

(1) பாரம்பரிய கலை இலக்கிய வடிவங்களைப் பேணி அவற்றின் மரபு மீருத வளர்ச்சியினை ஏற்படுத்தல்.

(2) புதிய சமூக மாற்றத்திற்கான புரட்சிகர கலை இலக்கியங்களை தோற்றுவித்து அவற்றினூடு சமகால நிகழ்வுப் போக்குகளை வெளிக்கொணர்தல்.

(3) மேற்குறித்த இருபோக்குகளையும் உள்ளடக்கிய வர்த்தக நோக்கிலான வெளிப்பாடுகள்.

இத்தகைய கலாசாரப் போக்குகள் மக்களை சென்றடையும் வழிகளையும் அவை ஏற்படுத்தும் தாக்கங்களையும் சென்றடைவதற்கான தடைகளையும் நாம் இங்கு நோக்குதல் வேண்டும்.

இன்று நடைமுறையில் எமது சமூக சூழலில் வெளியாகும் கலாசார நிகழ்வுகள் பிரதானமாக 3 வழிகளில் மக்களை அடைகின்றன.

(1) அரசினூடும் அதுசார்ந்த ஊடகங்களினூடும்.

(2) அரசிற்கு எதிர்நிலையை எடுத்த போராட்ட குழுக்களாலும் அவைச்சார்ந்த அமைப்புக்களாலும்.

(3) தனி நபர்களாலும் உதிரிக் குழுக்களாலும்.

இதில் முதலாம் வகை இரண்டாம் வகை வெளிப்பாடுகள் தவிர்க்க முடியாமல் தம் இருப்பை நியாயப்படுத்தும் பிரசாரப்பாணியிலான கலை இலக்கியங்களையே தோற்றுவிக்கும். எனவே இவை மக்களின் சிந்தனைத் தூண்டலுக்கேற்ற கலைகளைப்படைப்பதில் அவர்களுக்கான சரியான கருத்துத் தளத்தை உருவாக்குவதில் தவறுகளே புரிந்து உள்ளன.

எனினும் மேற்குறித்து இருநிலைகளையும் நிராகரித்து நிலவுகின்ற ஜனநாயக மறுப்பு, யுத்த சூழல் என்பவற்றை எதிர் கொண்டு மூன்ரும் வகை ஊடகத்தீனூடு ஆங்காங்கே முளையிடும் சரியான சிந்தனைப் போக்குகள் உருவாகத்தான் செய்கின்றன. இவை புதிய சமூக மாற்றத்திற்கான புரட்சிகர கலைஇலக்கியங்களை தோற்றுவித்து, அவற்றினூடு சமகால நிகழ்வுப்போக்குகளை வெளிப்படுத்தவும் மக்களை உணர்வு பூர்வமான சிந்தனைக்கும் உட்படுத்தவும் முனைகின்றன எனினும் எமது மொத்த சமூக சூழலில் இவற்றின் பெறுமானம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது இதற்கான காரணங்களை பின்வருமாறு நோக்குவோம்.

## ஜனநாயக மறுப்பும் ஏகாதிபத்திய ஆதிக்கமும்

அரசினைப் பொறுத்தவரை தன்னை நியாயப்படுத்தாத தனக்கு சார்பற்ற விரோதமான கருத்துக்கள் எத்தளங்களில் இருந்து வந்தாலும் அவற்றை மறை முகமாகவோ நேரடியாகவோ தடுத்து நிறுத்தவே முனையும். இதற்கு இலங்கையில் இயங்கும் தணிக்கைக் குழுவின் செயற்பாடுகளும், திறந்த

சிவழர்த்தி

மேடைகளில் சிறந்த கலாசார நிகழ்வுகளை மேடையேற்றுவதற்கான தடைகளும் சிறந்த உதாரணங்களாகும்.

இந்நடை முறைகளுக்கு அப்பால் சுயாதீனமாக இயங்கும் கலைஞர்களை கலாசாரதளங்களை விலைகொடுத்து வாங்க அரசு முயற்சி செய்வதும் கண்கூடு உதாரணமாக 1971களின் அண்மிய காலப் பகுதிகள் இடதுசாரிப் பாரம்பரிய வளர்ச்சியின் பிரதான கூறுகள் ஆகும். இச் சூழ்நிலையின் தாக்கங்கட் உட்பட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக இருந்த தம்மயா கொட "இறந்தவர்களின் சவக்கிடங்குகளில் உயிர்ப்பு" என்ற நாடகத்தை மேடை ஏற்றி புகழ் பெற்றவர். சிறந்த நெறியாளராக கணிக்கப்பட்டவர் ஆனல் பிற்காலங்களில் அரசின் தகவல் தொடர்பு சாதனங்களின் உயர்பதவிகளில் அமர்த்தப்பட்டதன் பின் சந்தர்ப்பவாதத்திற்கு தள்பட்டார். இவ்வாறே வடக்கு கிழக்கு கலைஞர்கள் உட்பட பல தென் பகுதி கலைஞர்களும் அரசின் சுகபோகங்களுக்கு உட்பட்டு மக்கள் நலன்களை மீறிய கலைஞர்களாக சோரம் போயினர்.

இவ்வாறன ஜனநாயக மறுப்புப் போக்கு போராட்ட குழுக்களையும் விட்டு வைக்கவில்லை. தாம் சார்ந்த கருத்தியல் நடைமுறைக்கு எதிர்நிலை எடுத்த கலைஞர்களை கலாசார தளங்களை தமது கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தினர். அல்லது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தென் பகுதியில் T.B. விஜய சூரியா போன்ற கலைஞர்கள் J.V.P. யினுல் சுட்டுக் கொல்லப்பட்டதும் வடக்கு கிழக்கு பகுதிகளில் பல் கலைக் கழக கலாசாரக் குழுவின் இயக்க மறுப்பு உட்பட (மறைமுகமாக நெருக்கடி கொடுக்கப் பட்டது தெரிந்ததே) பலகலாசாரக் குழுக்கள் புலிகளால் தடை செய்யப்பட்டது, தமிழீழ மாணவர் பேரவையினரின் கலை வெளிப்பாட்டு சாதனங்கள் (ஒளி, ஒலிப் பதிவு கருவிகள் நாடாக்கள், நூல்கள்) கவிஞரும் புகைப்படக் கலைஞருமான தமயந்தியின் கருவிகள், படங்கள் பறிமுதல் செய்யப்பட்டது பல கலைஞர்கள் இன்று தமது மண்ணிற்கு திரும்ப முடியாமல் அஞ்ஞாதவாசம் புரிவதும் சிறந்த உதாரண்ங்கள் ஆகும்.

இவற்றை மிஞ்சிய கலைஞர்கள், கலாசார தளங்களை ஏகாதிபத்தியங்களின் அடிவருடிகளான மத நிறுவனங்கள், பொது நலஸ்தாபனம் என்ற பெயரில் இயங்கும் நிதிநிறுவனங்கள் என்பன தமதாட்கொள்வதோடு நவீனமயப்பட்ட ஆதிக்கத்தையும் செலுத்துகின்றன.

## கலை இலக்கியமும் அதன் வெளிப்பாட்டு வடிவமும்.

இன்று கலை இலக்கியங்கள் நிகழ்கலை இலக்கியங்களாகவும் (நாடகம், கலைநிகழ்வுகள் 85 களில் பல்கலைக்கழக கலாசாரக் குழுவினுல் பரீட்சித்து பார்த்த வில்லுப் பாட்டு கதாபிரசங்கம்) மௌன வாசிப்புக்கு உட்பட்ட இலக்கியங்களாகவும் (கவிதை, சிறுகதை, நாவல்) வெளிவருகின்றன. இவை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் அவற்றின் தன்மைகளுக்கு ஏற்ப வேறுபடுகின்றன உதாரணமாக மௌன வாசிப்புக்கு உட்பட்ட இலக்கியங்களின் பிரதிகள் அதிகமாகும் போது பல்லாயிரக்கணக்கான வாசகர்களை சென்றடைகின்றன. ஆனல் நிகழ்கலை இலக்கியங்கள் நிகழ்த்தப்படும்களத்திற்கு வருகை தந்த மக்களை மட்டுமே சென்றடைகின்றன என்ற குறைபாடுகள் நிலவுகின்றன. ஆனல் ஒப்பீட்டளவில் நிகழ்கலை இலக்கிய வடிவங்கள் மக்களின் மனங்களை இலகுவில் ஆட்கொள்வதை மறுக்கமுடியாது. இந்நிகழ்வுகள் பரந்து பட்ட மக்களை சென்றடைய வேண்டுமாயின் நிகழ்களங்களை விரிவுபடுத்தி சென்றடையும் வழிமுறைகளை மேற்கொள்வதோடு மக்களின் வாழ்நிலையோடு பிணைந்த சமகால பிரச்சினைகளை வடிவமைத்தல் வேண்டும்.

85களில் யாழ் பல்கலைக்கழக கலாசாரக் குழுவினுல் உருவாக்கப்பட்ட கவிதா நிகழ்வு, மண் சுமந்தமேனியர் நாடகம் என்பன ஏறத்தாள அறுபது தடவைகளுக்கு மேல் மேடை ஏற்றப்பட்ட போதும் மக்கள் திரளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றியதோடு பார்வையாளர்கள் நிகழ்வுகளோடு ஒன்றித்து உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது அழுதமையினை பார்க்கக்கூடியதாக இருந்தது. எனவே நிகழ்கலை இலக்கியங்கள் இலகுவாக அதிக மக்களை சென்றடைவது கடினம் என்ற கருத்து நிலை கேள்விக்கு உள்ளாகிறது.

கலை கலைக்காகவா மக்களுக்காகவா-

மேற்குறித்த சர்ச்சைகள் இன்னும் விவாதகங்களுக்கு உட்பட்டு வருகின்றபோதும் ஆதிக்க வாதம் ஒடுக்கு முறை நிலவுகின்ற நாடுகளில் அவற்றிற்கெதிரான மக்கள் போராட்டம் நிலவுகின்ற சூழலில் மக்களைப் பிரிந்தகற்பனைவாத, வறட்டுவாத கலைப்படைப்புக்கள் தூக்கி எறியப்பட்டு மக்களுக்கான கலைப்படைப்புகளே நீங்காநினைவுகளாக நிலைத்து இருக்கின்றன. இதற்கு இலங்கையின் போராட்ட சூழல் சிறந்த உதாரணமாக விளங்குகின்றன. 80களுக்கு பிற்பட்ட காலங்களின் தோற்றம் பெற்ற கலை இலக்கியங்கள் சமூக சூழலில் ஏற்படுத்திய தாக்கம் 80களுக்கு முற்பட்ட கலைத்துவ வெளிப்பாடுகள் ஏற்படுத்தவில்லை. சமகாலக் கவிஞர்களான ஜெயபாலன், சேரன், செழியன் போன்ரோரின் கவிதைத் தொகுதிகளும் மண்சுமந்தமேனியர், சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் போன்ற நாடகங்களும் கவிதா நிகழ்வும் மேற்குறித்த சர்ச்சைக்கு சான்று பகரும்.

(குறிப்பு-மேற்குறித்த, கலைப்படைப்புக்கள் சில உதாரணங்கள் மட்டுமே)

## உள்ளடக்கம் வடிவம் பற்றி

பொதுவாக ஒரு கலைப்படைப்புக்கு உள்ளடக்கம் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு வடிவமும் முக்கியத்துவப் படுகின்றது. ஆயினும் அண்மைக் காலங்களில் நாடக உலகில் ஒரு புறத்தில் வடி

→ 5 ம் பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



# கற்பென்று எதனைச் சொல்வீர் அது இல்லை கற்பு....

- பாஞ்சாலி.-



சுதந்திரப் பறவைகள்.

கற்புப் பற்றி L.T.T.E. கொண்டுள்ள நிலைப்பாட்டை ஆராய்வோம். "சீதனக் கொடுமையை ஒழிப்போம்!", "பெண்ணடிமைத் தனத்தை நீக்குவோம்!" என்றெல்லாம் பிரகடனப்படுத்தும் இவ்வியக்கம் கற்புப்பற்றியோ அல்லது ஆணாதிக்கம் பற்றியோ எதுவித கருத்துக்களையும் இன்னும் பகிரங்கமாக முன்வைக்கவில்லை. எனினும் L.T.T.E. இயக்கமும் அதன் உறுப்பினர்களும் இது தொடர்பாகக் கொண்டுள்ள நிலைப்பாடினைப் பல உதாரணங்கள் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இயக்கத்தின் உயர்மட்டங்களில் கூட பாலியல் வன்முறைக்கு உட்பட்ட பெண்களைக் 'கற்பழிக்கப்பட்டவர்கள்', 'வழிதவறியவர்கள்' என்றெல்லாம் குறிப்பிடுவதைக் காணலாம். கற்புப் பற்றி நமது சமுதாயம் கொண்டுள்ள கருத்தினை இவ்வியக்க உறுப்பினர்கள் அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சிறு எடுத்துக்காட்டு.

பாலியல் தொடர்பாக இவ்வியக்கத்திடம் ஒரு 'தூய்மை வாதப்' போக்கு காணப்படுகிறது. இந்தத் தூய்மை வாதம் அடிப்படைவாதத்துடன் (Fundamentalism) மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது. ஆண்களும் பெண்களும் வெவ்வேறான முகாம்களில் வசிக்கவேண்டும் என்ற நிபந்தனை இதுக்கொரு நல்ல எடுத்துக்காட்டு. ஆண்மை, பெண்மை என்ற பிரிவுகள் சமூகத்தால் உருவாக்கப்பட்ட பிரிவுகள் என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்களாயின் இவ்வாறான கட்டுப்பாடுகளை விதித்திருக்கமாட்டார்கள். அடிப்படையிலேயே ஆண்களும் பெண்களும் வேறுபட்டவர்கள் என்ற கருத்தை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே இந்த நடவடிக்கைகள் அமைகின்றன. மேலும் ஆண்-பெண் உறவுகளிலும் இவர்களது பிற்போக்கான கருத்துக்கள் வெளிப்படுகின்றன. ஒரு உறுப்பினர் இயக்கத்தில் சேர்ந்து கொண்டால் சேர்ந்து 5 வருடங்களுக்கு திருமணம் செய்யவோ அல்லது உறவு வைத்திருக்கவோ கூடாது என்ற நடைமுறை மனித உறவுகளைப் புரிந்துகொள்ளாத் தன்மையை உணர்த்துகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாதம் பத்திரிகையில் (யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகள்யாவும் L.T.T.E. யின் 'கட்டுப்பாட்டுக்குள்' இருப்பதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள் என நினைக்கிறேன். அத்துடன் அவையாவும் L.T.T.E யால் பிரச்சார இயந்திரங்களாகவே உபயோகிக்கப்படுகின்றன) பின்வரும் கருத்துப்பட ஒரு கடிதம் 'நலன்விரும்பி' ஒருவரால் எழுதப்பட்டிருந்தது. 'கொழும்பிலே சீரழியும் பெண்கள்' என அக்கடிதத்திற்குத் தலைப்பிடப்பட்டிருந்தது.

"யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் போகும் இளம் பெண்கள் சிங்கள இராணுவத்தினருடனும் முஸ்லிம் இளைஞர்களிடமும் சோரம் போக வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஏனெனில் இப்பெண்களின் சகோதரர்களோ அல்லது உறவினர்களோ பொலிசாராலோ இராணுவத்தினராலோ கைது செய்யப்படும் போது அவர்களை மீட்டெடுப்பதற்காகவே இவ்வாறு சோரம் போகிறார்கள். இந்த நிலையைத் தடுக்கும் பொருட்டு L.T.T.E. இளம் பெண்கள் கொழும்பு போவதைத் தடைசெய்யவேண்டும்."

கொழும்பிலிருந்து திரும்பி வரும் பெண்களைத் தீக்குளிக்கச் செய்து அவர்களது கற்பைச் சோதிக்க வேண்டும் என்றும் அந்த 'நலன் விரும்பி' ஏன் எழுதவில்லை என்றுதான் புரியவில்லை.

L.T.T.E. யின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இப்பத்திரிகையில் இவ்வாறான ஒரு கீழ்த்தரமான கடிதம் வெளிவந்தமை L.T.T.E. யின் ஆதரவு இந்நிலைப்பாட்டுக்கு உண்டு என்பதை வெளிக் காட்டுகிறது. அல்லாவிட்டால் கடுமையான பத்திரிகைத் தணிக்கையை அமுல்படுத்தும் இவர்கள் இக்கடிதத்தை பிரசுரிக்காமல் விட்டிருக்கலாம் அல்லது கண்டித்து ஒரு அறிக்கை விட்டிருக்கலாம். இக்கடிதத்தின் மூலம் L.T.T.E. யின் நிலைப்பாடுகள் பல நன்கு அம்பலமாகின்றன.

முதலாவதாக, பெண்களைக் கட்டுப்படுத்த கற்பு எனும் கருத்தியலை பாவிப்பது. L.T.T.E. யினர் மக்களின் நடமாட்டத்தை அதிகமாகக் கட்டுப்படுத்திவருகிறார்கள். 'பாஸ்' முறைகூட இதனைச் சாதிக்கும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நடைமுறைதான். பெண்களை கட்டுப்படுத்த இன்னும் அதிகமாகவே கற்பையும் இழுப்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அடிப்படைவாதம் தலைதூக்குகிறது என்பதற்கு இது ஒரு அறிகுறியாகும்.

மேலும் 'அந்நிய' இனத்தைச் சேர்ந்த ஆண்களுடன் 'சோரம்' போதல் பற்றிப் பேசப்படுகிறது. நாம் எமது பெண்களை என்னவும் செய்யலாம். ஆனால் மற்றைய ஆண்கள் எமது பெண்களை ஏறெடுத்துப் பார்க்கவும் கூடாது' என்ற கருத்து கற்புப்பற்றி இவர்கள் கொண்டுள்ள இரட்டை நிலைப்பாட்டை வெளிக்கொண்டு வருகிறது. L.T.T.E. யின் கண்களில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் எதிரிகள். இந்த இனப்பூசலைக்கூடப் பெண்களை அடக்குவதற்கு பாவிப்பது கவலைக்குரிய விடயமாகும்.

என்னுடைய எமது பெண்கள் ஆயுதப்போராட்டத்தில் இணைந்து விட்டார்கள். முன்னொரு போதும் அனுபவிக்காத சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள் என சிந்திக்கிறீர்களா? பெண்விடுதலையின் அடிப்படையே கற்புப் பற்றியதுதான் என சென்ற கட்டுரையில் கூறியதையே நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். துப்பாக்கியேந்திக் காற்சட்டை போட்டாலென்ன, ஏன் 'பஜேரோக்களில்' திரிந்தாலென்ன அது மட்டும் சுதந்திரமாகிவிடாது. நாம் எமக்குச் சரியெனப்படும் வகையில் நடக்கும் உரிமையைப் பெறும்போதுதான் நாம் உண்மையில் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

ஈரான் - ஈராக் யுத்தத்தின் போது பெண்களும் ஈரானிய இராணுவத்தில் சேர்க்கப்பட்டார்கள். அடிப்படை வாதம் தலைவிரித்தாடும் அந்த நாட்டில் இதை எப்படி அனுமதித்தார்கள்? ஒரு பெண் இராணுவத்தில் சேர்ந்து கொள்ள விரும்பின் அவள் தனது தந்தையின் அல்லது சகோதரனின் அல்லது கணவனின் அனுமதி பெற்றுத்தான் சேர்ந்து கொள்ள முடியும என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. யுத்தம் முடிந்தவுடன் அவ்வளவு பெண்களும் 'குசினிக்குள் திரும்பிப் போகத்தான்' நேர்ந்தது.

இவ்வாறான வரலாற்றுப் பாடங்களில் இருந்து நாம் என்ன விடயங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும்? முதலாவதாக, எவ்வகைப் போராட்டமாக (அது வர்க்கப் போராட்டமாகவோ அல்லது தேசிய விடுதலைப் போராட்டமாகவோ) இருந்தாலும் சரி அதில் பெண்கள் இணைந்து கொள்வதன் மூலம் மட்டும் விடுதலையடையப் போவதில்லை. ஏனெனில் பல்வேறு கட்சிகளும் அமைப்புக்களும் இயக்கங்களும் பல்வேறு சித்தாந்தங்களில் நம்பிக்கை கொண்டிருக்கலாம் ஆனால் அவையாவும ஆணாதிக்கக் கருத்துக்களால் வெவ்வேறு அளவுகளில் கட்டுண்டு கிடக்கின்றன. சுயாதீன (autonomous) பெண்கள் அமைப்புகளின் முக்கியத்துவம் இதில்தான் அவசியமாகிறது. இயக்கத்திற்குள்ளும் கட்சிக்குள்ளும் ஆணாதிக்க வெறிபிடித்த கருத்துக்கள் தலைதூக்கும் போதெல்லாம் அவ்வியக்கத்திற்குள் இருக்கும் பெண்களால் அதைத் தடுக்க முடிவதில்லை. ஏனெனில் அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதுடன், அனேகமாக அதிகாரத்தில் இருப்பதில்லை. சுயாதீன பெண்கள் அமைப்புக்கள் இவ்வாறான அரசியல் இயக்கங்களுக்குச் சமாந்தரமாக வளர்ச்சியடைந்திருப்பின் அவை அயராது விழிப்புணர்வுடன் இருப்பதின் மூலம் இவ்வாறான பிற்போக்கான கருத்துக்கள், நடைமுறைகள் தலைதூக்கும் போது அதற்கெதிராக கடுமையாகப் போராடலாம். இயக்கத்திற்குள் இருக்கும் பெண்கள் கட்சி சட்டதிட்டங்கள் ஒழுங்கு முறைகள் போன்றவற்றாலும், கட்சிக்குத் 'துரோகம்' செய்யக் கூடாது என்ற உணர்வாலும் இவ்வாறு போராட முடிவதில்லை.

நமது தேசத்தில் ஏன் இவ்வாறான சுயாதீன பெண்கள் அமைப்புக்கள் இல்லை? இக் கேள்விக்கு விடைகாண வேண்டுமாயின் நாம் முதலில் எமது பிரதேசத்தில் காணப்படும் பொதுவான அரசியல் நிலைமையைக் கருத்தில் கொள்ள வேண்டும். L.T.T.E. இயக்கம் துப்பாக்கியின் பலத்தால் அதிகாரத்தில் இருக்கும் ஒரு அமைப்பு. ஏனைய அரசியல் அமைப்புக்களிலும் வெகுஜன அமைப்புக்களிலும் அதற்கு அதீத பயம் உண்டு. எனவே காலந்தோறும் உருவாகும் அரசியல் அமைப்புக்கள், வெகுஜன அமைப்புக்கள், பெண்கள் அமைப்புகள்,

பக் 8ஐ நோக்கி →

# கலாசார அரசியல்...

நாலாம் பக்கத் தொடர்:

வத்திற்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நிலையும் (அழகியல் சார்ந்த வெளிப்பாடுகள்) இன்னொரு புறத்தில் உள்ளடக்கத்திற்கு தனியே முக்கியத்துவம் கொடுக்கும் நிலையும் (பிரச்சார பாணியிலான வெளிப்பாடுகள்) காணப்படுகின்றது. ஆனால் இவை இரண்டும் எங்கே ஒருங்கமைந்து வெளிப்படுகின்றதோ அங்குதான் அக்கலை வெளிப்பாட்டின் வெற்றி தங்கி உள்ளது. உதாரணம் மாயமான் (வீதிநாடகம்) மண்சுமந்த மேனியார் (மேடை நாடகம்).

## நமது கலைகளும் அவை சென்றடையும் களமும்

மேற்குறித்து உள்ளடக்கம், வடிவம் என்பவற்றை ஒருங்கே கொண்ட கலைப் படைப்புக்கள் பெரும்பாலும் அடிநிலை மக்களுக்கானதாக அமையாமல் உயர்நிலை மக்களின் உணர்வுகளுக்கே தீனி போடுகின்றன என்ற குற்றச்சாட்டு நிலவுகின்றன. குறிப்பாக 80களுக்கு பின் தோன்றிய எதிர்ப்பு கலை இலக்கியங்கள் மக்களுக்கான அறிவு பூர்வமான சிந்தனைத் தூண்டல்களை நிகழ்த்திய போதும் அவை அடிநிலை மக்களை சிறப்பாக சென்றடையாமல் நகர்புறம் சார்ந்த உயர் நிலை நடுத்தர மக்களையே பெருமளவு சென்றடைந்தன என்பது பெருமளவு உண்மை.

85களில் யாழ்பாணத்தின் பெரும்பாலான கிராமங்கள் தோறும் மேடை ஏற்றப்பட்ட மண்சுமந்த மேனியர் நாடகம் பலரது கவனத்தை ஈர்த்த போதும் அதன் கடின வடிவமைப்பும், கதைப் பாங்கும், உயர்வகைக் கிண்டல் பாணியும் சங்கேதமாகச் சொல்லும் முறையும் அதிகளவு அடிநிலை மக்களுக்கு புரியவில்லை என்பதும் யாழ்ப்பாணதது நடுத்தர குடும்ப அமைப்பின் மாதிரியையே சுட்டி நின்றது என்பதும் பல மட்டங்களிலும் விமர்சனமாக வைக்கப்பட்டதை நோக்குதல் வேண்டும்.

மாறுக "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" நாடகம் அடிநிலை மக்களின் சமூக சிக்கல்களை போராட்ட சூழ் நிலையினை இலகுவாக சுட்டி நின்ற போதும்அதன் வடிவமைப்பில் மேடை உருவாக்கத்தில் ஏற்பட்ட தோல்வியினால் பலராலும் நிராகரிக்கப் பட்டது.

## தவறான பயன்படுத்தலும் அதன் எதிர் விளைவும்

மேற்குறித்த நிகழ்வுப் போக்குகளுடன் கடந்த காலங்களில் கலாசாரக் குழுக்களும் கலைஞர்களும் அரசியல் அமைப்புக்களால் தவறாக பயன்படுத்தப் பட்டமையும் துப்பாக்கி முனையில் பேனா முனை திருப்பப் பட்டதுமான கசப்பான அனுபவங்களால் அரசியல் அடித்தளம் இன்றிய கலாசாரக் குழுக்களும் கலைஞர்களும் வெறுமனே அழுக்கக் குழுக்களாக (Pre..ure Gr..s) செயற்பட முனையும் தவறான போக்கு இன்று நிலவுகின்றது.

இந்நிலையில் ஒரு கலை இலக்கியவாதி கருத்தியல் சார்ந்து சுதந்திர இயக்கம் உள்ளவன் என்பதனை ஏற்றுக் கொள்ளும் அதே வேளை அரசியல் அடித்தளம் இன்றிய கலாசார இயக்கம் அடிப்படை சமூக மாற்றத்தினை ஏற்படுத்த துணை புரிய போவதில்லை என்பதனை புரிதல் வேண்டும். இங்கு கலை இலக்கியவாதியும் அரசியல் இயக்கமும் பரஸ்பர புந்துணர்வையும் விமர்சனப் பாங்கையும் வளர்த்தெடுப்பதில் பிரதான கவனம் செலுத்தல் வேண்டும்.

எனவே மேற்குறித்த கருத்து நிலைகளில் மென்மேலும் தெளிவினைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியம் ஆகும். அவ்வாறாயின் நம்மிடையே விமர்சன இயலை வளர்ப்பதற்கும், பரந்துபட்ட மக்களின் மத்தியில் திறந்த விவாதங்களை நடாத்துவதோடு அரசியல் கலாசாரத்தளத்தினை கருத்தியல் சார்ந்த வளர்ச்சிக்கு உட்படுத்து வதற்கு நாம் தயாராக உள்ளோமா? கற்பனைவாத, வறட்டுவாத, மூடநம்பிக்கைளுக்குட்பட்டகுறுஞ் சிந்தனைவாத மரபுசார் கலாசார தளத்தினை ஆய்வுக்கு உட்படுத்தி மாற்று கலாசாரத்தினை (Alternative culture) உருவாக்க முனைவோமா? அனைத்து ஆதிக்கங்களுக்கும், ஒடுக்குமுறை, பலாதகாரம, அராஜகவாதம், குழுவாதம் துரோகத்தனம் என்பற்றுக்குமான எதிர் நிலையை எடுத்து அவற்றை ஆய்வுக்கு உட்படுத்துவோமா?

நிலவுகின்ற பகை முரண்பாடுகளை சினேக முரண்பாடுகளாக மாற்றி குறைந்த பட்ச ஐக்கியத்தை ஏற்படுத்துவோமா- என்ற வினாக்களுக்கு விடை காணும் போதுதான் எமக்கான கலாசார பெறுமானத்தினை ஏற்படுத்த முடியும்.

நன்றி - நூலகத்திட்டம்



# எல்லாம் தந்தோ

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அரசியலாய்வாளரும் விரிவுரையாளருமான கலாநிதி

**ஜயதேவ உயங்கொட**

ஆற்றிய உரையின் தமிழாக்கம்:

சிங்களம் வழி தமிழில்: ச. பாலகிருஷ்ணன்

மேஜ் இயக்கம் இனங்களுக்கிடையிலான இனவாதப் பிரச்சினைகள் தொடர்பாக செயற்படுவதனால் இலங்கையின் இனவாதப் பிரச்சினையின் தற்போதைய நிலைமைகளுக்கு ஏதுவான காரணிகள் சில பற்றியே நான் பேச விரும்புகிறேன்.

சமீபத்தில் (15.02.91) மட்டக்களப்பு பிரதேசத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அவர்கள் கூறியதாக தேசியப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஒரு விடயத்தை மையமாக வைத்து எனது பேச்சை ஆரம்பிக்க விரும்புகிறேன். "Do not ask for Eelam any more...... we have given you 'Ellam'" ..... இனிமேலும் ஈழம் கேட்காதீர்கள். நாங்கள் உங்களுக்கு எல்லாம் கொடுத்து விட்டோம் என ஜனாதிபதி அவர்கள் கூறியதாக பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

"ஈழம்", "எல்லாம்" என்ற இரு சொற்கள் கேள்விக்கிடமாக அமைந்துள்ளதை விட இனவாதப் பிரச்சினை தொடர்பாக இந்த அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாடுகள் இச்சொற்களின் மூலம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது என்றே நான் கருதுகின்றேன். இந்நிலைப்பாட்டில் இரு காரணிகள் அடங்கியுள்ளன. ஒன்று, இந்நாட்டில் இன முரண்பாடு ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணிகள் சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், அரசியல் யாப்பு ரீதியாகவும் தீர்க்கப்பட்டு விட்டன. எனவே இனவாத முரண்பாடு உருவாகுவதற்கு ஏதுவான காரணிகள் இனிமேல் செல்லுபடியற்றவை எனப்பிரகடனப் படுத்துதல்.

உதாரணமாக அரசாங்கத்தினர் பிரகடனப்படுத்துவது என்னவென்றால், மொழியுரிமைப் பிரச்சினை இரு மொழிகளும் அரசகரும மொழியாக ஆக்கப்பட்டுள்ளதன் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்புப் பிரச்சினைகள் இனவிகிதாசார அடிப்படையில் தொழில் வழங்குவதன் மூலம் தீர்க்க எல்லாவித நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
சர்வகட்சி மாநாட்டின் மூலம் இனப்பிரச்சினையின் ஏனைய காரணிகளைத் த் தீர்ப்பதற்காகவும், அதிகாரப் பங்கீட்டை உறுதி செய்வதற்காகவும் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாகாண சபை நடைமுறைகள் மூலம் ஆட்சியதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நடைமுறைகள் மூலம் இனப்பிரச்சினை ஏற்படுவதற்கு வழிவகுத்த காரணிகள் பலவற்றைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதாகும்.

அரசாங்கத்தின் இப்பிரகடனத்தில் அடங்கியுள்ள இரண்டாவது காரணி என்னவென்றால் இந்நாட்டில் இதுவரை இருந்த அரச தலைவர்களை விட தற்போதைய ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுபவர் என்றும், இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசியல் அர்ப்பணிப்புடையவர் என்றதுமான நிலைப்பாட்டைப் பிரகடனப்படுத்துதலாகும்.

குறிப்பாக அரசாங்கத்தின் இந்த இரண்டாவது நிலைப்பாட்டைப் பிரகடனப்படுத்துகின்ற முக்கிய வசனங்களான இலங்கை ஒரு பல்லினப் பாங்கான நாடு, பன்முகக் கலாசார சமூகம் (Multi - ethnic, Multi Cultural society) போன்றவற்றை அரச பேச்சாளர்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வருவதையும் காணக் கூடியதாக உள்ளது. இந்நிலைப்பாடுகளை மிகக் கவனமாகப் பரீட்சித்துப் பார்க்கும் போது இப்பிரச்சினை ஒரு புதிய தன்மையை, அல்லது ஒரு புதிய கட்டத்தை அடைந்துள்ளதையும் இப்புதிய கட்டம் என்ன என்பது பற்றி இவ்வரசாங்கத்தின் நிலைப்பாடுகள் தெளிவாக கவனத்தைச் செலுத்தி செயற்படவில்லை என்பதையும் விளங்கிக் கொள்ளலாம்.

இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை நாம் காணவேண்டுமானால், இன்று வட-கிழக்கில் தோன்றியுள்ள யுத்த நிலைமைகளையும், அந்த யுத்தத்தின் மூலம் சமாதானத்திற்கு விடுக்கப்படும் சவால்களையும், மையமாக வைத்தே சிந்தித்துச் செயற்பட வேண்டும். இந்நாட்டில் தமிழ் மக்களின் மொழியுரிமை, பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, காணி போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த சம்பிரதாயப் பிரச்சின்னகள் இனவாத முரண்பாட்டிற்கு வழிவகுத்தாலும் இக்காரணிகள் எல்லாவற்றையும் விட இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தின் விளைவாகத் தோன்றியுள்ள பிரச்சினைகள் இம்முரண்பாட்டின் கேந்திரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. வேறு விதத்தில் கூறுவதானால், இப் பிரச்சினைக்கு காரணிகளாக அமைந்த சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளை இரண்டாம் நிலைக்குத் தள்ளி விட்டு யுத்தத்தின் விளைவாகத் தோன்றியுள்ள பிரச்சினைகள் முதலாமிடத்தை வகிக்கின்றன எனக் கூறலாம்.

எனவே யுத்தம், சமாதானம், ஜனநாயகம், ஆகிய முரண்பாடுகளின் ஊடாகத் தான் இனவாத முரண்பாட்டைப் பற்றி ஆராய வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இதனுடன் தொடர்புடைய இன்னொரு காரணி என்னவென்றால் ஜனநாயகம், சமாதானம் போன்ற விடயங்களில் எதிர்கால விளைவுகள் பற்றிய கருத்துக்களை எவ்வளவு தூரம் இந்நாட்டின் அரசியல் கட்சிகள் முன்வைத்துள்ளன என்பதாகும்.

இந்நாட்டின் இனவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அடிப்படையிலேயே 1987ம் ஆண்டு மாகாணசபை அமைப்பு முறை முன்வைக்கப்பட்டது. இலங்கையின் இனவாதப் பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபைகள் அமைப்பு முறையின் மூலம் இலங்கையில் அதிகாரப் பங்கீட்டிற்கு கோட்பாட்டு ரீதியிலும், செயற்பாட்டு ரீதியிலும் 87ம், 88ம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட சாதகமான விளைவுகள் எதுவுமிருக்குமானால் அவை இப்போது இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதற்கான முக்கிய காரணமென்னவென்றால் ஆட்சியதிகாரங்களை முறையாகப் பகிர்ந்தளிக்காமல், நிர்வாக அடிப்படையில் நிர்வாக நடைமுறைகளை பரவலாக்கும் செயன்முறையின் அடிப்படையில் மட்டும் செயற்படவிழைவதாகும். அதிகாரப் பங்கீடு என்பதை அரசியல் அல்லது ஜனநாயக அடிப்படையில் கருதுவதானால் மத்தியப்படுத்தப்பட்டுள்ள அரச ஆட்சியதிகாரங்கள் பிரதேச அடிப்படையில் அல்லது இனக் குழுமங்களின் அடிப்படையில் பங்கிடுவதேயொழிய நிர்வாக முறைகளைப் பரவலாக்குவதென்பதல்ல.

நிர்வாகப் பரவலாக்குதல் என்பது அரசின் கொள்கைகளை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நிர்வாகப் பொறுப்புக்களை பிரதேச அடிப்படையில் எப்படி பரவலாக்குவது என்ற கேள்விக்கு விடை காணும் நடைமுறையாகும்.

அதிகாரங்களைப் பங்கீடு செய்யும் மாகாண சபை முறையினுள் இருக்கும் ஆட்சியதிகாரங்களை இலங்கையின் ஏனைய இனக் குழுமங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய கோட்பாட்டை மூடி மறைத்து, நிறைவேற்று அதிகாரங்களை மத்தியில் வைத்துக் கொண்டு செயலாற்றுவதற்கு எவ்வகையில் மாகாணசபை அமைப்பைப் பயன்படுத்தலாம் என அரசாங்கம் முயலும் தன்மையையே கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. இலங்கையின் இனவாதப் பிரச்சினையின் தீர்வு தொடர்பாகவும் இலங்கையின் ஜனநாயக மயப்படுத்தல் பற்றிய பிரச்சினை தொடர்பாகவும், அரசியலதிகாரங்களின் பங்கீட்டின் தேவையானது என்றுமில்லாதவாறு இன்று முக்கிய தேவையான ஒன்றாக உருவெடுத்துள்ளது என்றே நான் கருதுகின்றேன்.

ஆனால் இந்நாட்டின் பிரதான அரசியல் சக்திகள் அதிகாரப் பகிர்வு எனும் ஜ[illegible]நாயகக் கோட்பாட்டிற்கு எத[illegible]ப்புத் தெரிவிக்கும் அல்லது ஆதரவு தெரிவிக்காத ஒரு சூழ்நிலையில் இத்தகைய அதிகாரப் பகிர்விற்கான தேவை ஏற்பட்டுள்ளமை ஒரு துரதிர்ஷ்டமான நிலைமையாகும். எனினும் மேஜ் போன்ற இயக்கங்களின் இன்றைய பிரதான கடமை என்னவென்றால் இந்த அதிகாரப் பங்கீட்டிற்காகப் போராடுவதாகும்.

இந்த அதிகாரப் பங்கீட்டின் தற்போதைய நிலைமையானது அண்மைக்காலமாக தென்னிலங்கையில் நிலவுகின்ற பிரச்சினையை மையமாகக் கொண்டே ஏற்பட்டது என்றே நான் கருதுகிறேன். நான் தென்[illegible] லங்கைப் பிரச்சினை எனக் கூறுவது என்னவென்றால் சிங்கள சமூகத்தில் அரச அதிகாரங்கள் தொடர்பாக நிலவும் அதிகாரத்துவ ஜனநாயக சமூக அமைப்பிற்கு முன் நிலமானிய அமைப்பில் நிலவிய அரச அதிகாரங்கள் பற்றிய அதிகாரத்துவ நிலைப்பாடுகள் பற்றியதே. இந்த சிங்கள சமூகத்தில் நிலவும் அதிகாரத்துவ அரசியல் கோட்பாடு

---

...ம் பக்கத்திலிருந்து -

*'ஹீரோ'வாகப் பரிணமிக்கிறீர்கள் எனச்சொல்லலாமா?*

என்.டி.ஆருக்குக் கூட்டம் கூடுவது உண்மைதான். ஆனால் தமிழகத்தில் நடிகர்களுக்குக் கூட்டம் கூடுவதைப் போல அதை நினைத்து விடாதீர்கள். ஆந்திர மக்கள் என்.டி.ஆருக்குக் கடுமையான ஒரு பாடம் புகட்டியுள்ளதை மறந்துவிடாதீர்கள். என்.டி.ஆருக்கு இரண்டு அடிப்படைகளில் கூட்டம் கூடுகிறது.

(i) அவரது சினிமாப் புகழால் கவரப்பட்டவர்கள்

(ii) அவரது சாதிக்காரர்களாலும் கட்சியாலும் திரட்டப் பட்டவர்கள். நாங்கள் அவரை அம்பலப்படுத்தி வருகிறோம், வளர்ந்தும் வருகிறோம். எங்களுக்கு வளர்ந்து வரும் மக்கள் கூட்டம் கொள்கையின் அடிப்படையில் திரள்கிறது. கொள்கை ஈடுபாடு இல்லாமல் தலைவர் வழிபாடு அடிப்படையில் கூடும் கூட்டம் நாளுக்கு நாள் தேயும். பல லட்சங்கள் என்பதிலிருந்து சில நூறுகள் என்கிற அளவிற்கு இன்று அவருக்குக் கூட்டம் குறைந்துவிட்டது. சமீபத்தில் அவரது பிறந்தநாள் விழா ஒரு அறையில் நடத்தப்பட்டது. எங்களுக்கோ ஐம்பது, நூறு எனத் தொடங்கிய கூட்டம் இன்று பத்து லட்சம் அளவில் பெருகி வருகிறது.

கத்தர் தனி நபரல்ல; ஒரு இயக் எனினும் இப்போது நிலைமை மாறி வருகிறது. தெலுங்கானாப் பகுதியில் இப்போது ஆயிரக்கணக்கில் பெண்கள் இயக்கத்தில் பங்கேற்கின்றனர். அவர்களில் பலர் பாடுகிறார்கள். பாடல் இயற்றுகிறார்கள். கலைக் குழுக்களைக் கூட அமைத்துச் செயல்படுகின்றார்கள். இன்றைய நிகழ்ச்சியில் கூட மூன்று நான்கு பெண்களை நீங்கள் பார்க்கலாம்.

*ஆந்திராவில்தான் உலகிலேயே சினிமா அரங்கு/மக்கள் தொகை விகிதம் அதிகம் எனக் கேள்விப் படுகிறோம். என்.டி.ஆர். போன்றவர்கள் தங்களின் மூன்றாந்தரத் திரைப்படங்களின் மூலம் இலட்சக்கணக்கான மக்களைத் திரட்டுகிறார்கள். அதே ஆந்திரத்தில்தான் கத்தருக்கும் இலட்சக்கணக்கில் மக்கள் கூடுகின்றனர். இந்த முரண்பாட்டை விளக்க முடியுமா? இரு கூட்டங்களுக்குமிடையே வேறுபாடுகள் ஏதும் உண்டா? நீங்கள் இன்னொரு மாற்று*

கத்தின் பிரதிநிதி இங்கே கூடுகிற கூட்டம் இயக்கத்தின் அடிப்படையில் கூடுகிற கூட்டம். சுமார் 2000 தோழர்களின் தியாக ஒளியால் ஈர்க்கப்பட்ட கூட்டம். வெறும் போஸ்டர்களால் கூட்டம் கூடுவதில்லை. 'ஆந்திரத்தின், அக்னிக் குஞ்சு' என்றெல்லாம் நூற்றுக்கணக்கில் திருச்சியில் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளீர்கள். இருந்தும் எத்தனை பேர் வரப்போகிறார்கள்? வாசுதேவ நல்லூரிலும் தரும புரியிலும் பல்லாயிரம் மக்கள் திரண்டார்கள் என்றால் அங்கே இயக்கத்தின் வீச்சு இருப்பதால்தான்.

*ஜனநாட்டிய மண்டலியில் தனிநபர் வழிபாடு இல்லை என்கிறீர்கள். கூடுகிற கூட்டம் கத்தருக்காக இல்லை என்றெல்லாம் சொல்கிறீர்கள். சரி மாவோ கூட இப்படியெல்லாம் நிறையச் சொல்லியிருக்கிறார். எனினும் அவராலும் தனிநபர் வழிபாட்டைத் தடுக்க முடியவில்லை. தமிழகத்தில் கூடக் கத்தரின் படத்தைக் காட்டித்தான் நாங்களும் கூட்டத்தைக் கூட்டுகிறோம். இன்றைய சூழலில் தனிநபரைச் சுற்றிப் பிம்பங்கள் எழுப்பப்படுவது தவிர்க்க இயலாதது என்று நினைக்கிறீர்களா? இது தனிநபர் வழிபாட்டிற்கு இட்டுச் செல்லாமல் தடுப்பதற்கு நிச்சயமான வழிமுறை ஏதும் உங்களிடம் இருக்கிறதா?*

சில வரலாற்றுச் சூழல்களில் சில நபர்களும் சில பெயர்களும் ஒரு இயக்கத்தைக் கட்டுவதற்கும் அவ்வியக்கம் பற்றி ஒரு கருத்துருவாக்குவதற்கும் தேவைப்படலாம். அந்த அளவிற்கு அது சரிதான் என்ற போதிலும், அடுத்த கட்டத்தில் இப்போது அழுத்தம் கொடுக்கிற புள்ளிகளை நாம் தவிர்த்து வேறு புள்ளிகளுக்கு அழுத்தத்தை நகர்த்த வேண்டும்.

ஒரு வணிக ரீதியான வீடியோ கேசட் தயாரிப்பாளர் ஒருவர் சமீபத்தில் எனது மூன்று கேசட்டுகளை வெளியிட்டுள்ளார். கேசட் உறையில் எனது படத்தைப் போடவேண்டும் என அவர் வற்புறுத்தினார். விற்பனை நன்கு நடைபெற அது அவசியம் என்றார். இது நமக்கு ஒரு பிரச்சினைதான். முதல் கேசட் எனது படத்துடன் வந்தது. எனது படத்துடன் மற்றவர்களின் படமும் பெரிதாக அச்சிடப்பட்டது. இரண்டாவது மூன்றாவது கேசட்களில் எனது

நன்றி - நூலகத்திட்டம்



# ...: ஈழம் எதற்கு?



...என்னவென்றால் இலங்கையின் அரசானது ஒருமுகப்படுத்தப்பட்ட சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை உறுதி செய்யும் அதிகாரம் கொண்ட ...ன்றாகத் திகழ வேண்டும் என்பதாகும். இக்கூற்றை நிரூபிப்பதற்கு உதாரணமொன்றைக் கூற விரும்புகிறேன். பல்லின, பலமத, பன்முக கலாசார பங்குகளைப் பற்றி அடிக்கடி பேசும் ஜனாதிபதி அவர்கள் அந்த பல்லின, பலமத, பல கலாசார தன்மைகளைப் பற்றிப் பேசும் அதே வேளையில் இலங்கையின் காலனித்துவ அமைப்பிற்கு முன்னைய நிலமானியத்துவ சமுதாயத்தில் நிலவிய அரச ஆட்சி முறை பற்றிய கோட்பாடுகள், தன்மைகள், சின்னங்கள், எல்லாவற்றையும் பிரபலமாக முன்வைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கின்றார். எங்களுடைய சுதந்திர தின வைபவங்களில் அல்லது தொலைக்காட்சியின் செய்திகளின் போதும் நாம் காணும் பண்டைய அரசாட்சி பற்றிய கோட்பாடுகள் பலரின் கேலிக்கு விருந்தாக அமைந்துள்ளது. ஆனாலும் என்னைப் பொறுத்தளவில் அவை நாம் சிரிக்கக்கூடிய விடயங்களல்ல. நாம் மிகவும் பயப்படக் கூடிய விடயங்களே.

இலங்கையில் அரசியல் ரீதியிலும், சமூகரீதியிலும் வன்முறைகள் மேலோங்கியிருக்கும் ஒரு காலகட்டத்தில் அரசியல் சம்பிரதாயங்கள் எப்படி நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நாம் கண்டிருக்கிறோம். இந்த நிலைப்பாடுகள் பற்றிய பிரச்சினைக்கு நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டே சகல அதிகாரங்களும் ஒரு முகப்படுத்தப்பட்டுள்ள, சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் அப்பாற்பட்ட நபராக ஜனாதிபதி விளங்குவதும் அரசியல நிலைமைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய விதத்தில் நாட்டின் ஸ்தாவரத் தன்மையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையாக அவர் கூறுவதையும் காணலாம்.

இவ்விடத்தில் மூக்கிய எதிர் முரண்பாட்டை அரசாங்கம் எதிர் நோக்கி உள்ளது. அதில் ஒன்று தான் இந்த சிங்கள, பௌத்த பெரும்பான்மையின சமூகத்தின் ஆதரவை எப்படிப் பெற்றுக் கொள்வதென்பதாகும். இந்த சிங்கள பௌத்த பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் அதே வேளையில் தான் சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தயாராக இருக்கின்றது என்பதை அரசாங்கம் கூறவேண்டிய நிலையில் இருக்கின்றது. இவ்வகையான எதிர்முரண்பாடு மிகவும் வலிமையான வகையில் வெளிப்படுத்தப்படும் ஒரு சந்தர்ப்பமாக ஒரு பக்கத்தில் சர்வகட்சி மாநாட்டுக்குத் தலைமை தாங்கி அதன் மூலம் இனவாதப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொள்ளும் அதே வேளையில்தான் பௌத்த சாசன அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பௌத்த பிக்குகளைக் கொண்ட அதியுயர் பிக்கு ஆலோசனைச் சபையை ஏற்படுத்தி சிங்கள, பௌத்த இனவாத ரீதியில் இயங்கும் பிக்குகளினதும், பிக்குகளல்லாதவர்களினதும் கருத்துக்களுக்குத் தான் தவறாது செவி மடுப்பதாகவும் வெளிப்படையாகக் கூறவேண்டியுள்ளது.

அண்மையில் பௌத்த சாசன அமைச்சினால் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கருத்தரங்கில் உரையாற்றிய ஜனாதிபதி "பண்டைய அரசர்களைப் போல தலைமைப் பிக்குகளின் கருத்துக்களுக்கு செவி மடுப்பது மட்டுமல்ல அவைகளை ஏற்றுக் கொள்வதற்கும் தான் தயாராக இருப்பதாகவும் உறுதியளித்துள்ளார். அதே வைபவத்தில் பண்டைய அரசர்கள் போல எமது ஆலோசனைகளையும், வேண்டுகோள்களையும் ஜனாதிபதி அவர்கள் ஏற்றுக் கொண்டு செயற்பட வேண்டுமென்று பௌத்த பிக்குமார்களும் வேண்டுகோள் விடுத்தார்கள். அரசியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக இருக்கும் பௌத்த பிக்கு சமூகத்தினரின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு இருப்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

என்னைப் பொறுத்தளவில் சிங்கள, பௌத்த சமூகத்திலுள்ள பௌத்த பிக்குகளும், அச் சமூகத்தின் உயர்தர வர்க்கத்தினரும் உண்மையான, ஜனநாயக ரீதியிலான அரசியல் மற்றும் கருத்தியல் பரிமாற்றத்தை முழுமையாக நிராகரிக்கும் குழுவினராக இருப்பது இங்கு பிரதான முரண்பாட்டை ஏற்படுத்துகின்றது. நான் நினைக்கிறேன் இலங்கையில் பௌத்த மதம் தொடர்பாக நிலவும் முக்கிய கருத்தியல் முரண்பாடுகளில் ஒன்று தான் அது என்று. அது இலங்கைச் சமூகத்தின் அரசியல், கருத்தியல் துறை ஜனநாயகமயப்படுவதை நிராகரிக்கும் தன்மை கொண்டதாகும்.

நான் இங்கு கூறுவதற்கு முயற்சிப்பது என்னவென்றால், இன்று சிங்கள சமூகத்தில் நிலவும் அதிகாரத்துவ, அரசியல் கோட்பாடு - அது அரசாங்கம் பற்றியதானாலும் சரி, பௌத்த கோவில்கள் பற்றியதானாலும் சரி - ஜனநாயகக் கோட்பாடுகளைக் கொண்டவையல்ல. அரசியல் ரீதியாக காலனித்துவ யுத்தத்திற்கு முன்பு நிலமானிய யுகத்தில் நிலவிய ஏகாதிபத்திய அதிகாரத்துவ அரசமைப்புப் பற்றிய கோட்பாடுகளைக் கொண்டவையாகும்.

தென்னிலங்கையில் சிங்களவர்களின் தலைமையிலுள்ள எல்லாக் கட்சிகளும் பல்வேறு மட்டங்களில் நான் இங்கு விளக்கிய தென்னிலங்கைப் பிரச்சினைக்குள் சிக்குண்டு கிடக்கின்றன. எனவே எங்களைப் போன்ற ஜனநாயக சக்திகளுக்கு இன்று இருக்கின்ற பிரதான சவால் என்னவென்றால் நான் முன்பு கூறிய தென்னிலங்கைப் பிரச்சினைக்கு அரசியற் கோட்பாட்டு ரீதியிலான ஜனநாயக மாற்றுத் தீர்வை எப்படி முன்வைப்பது என்பதாகும்.

1987ம் ஆண்டு எங்களில் பலரின் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இனவாதப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபையானது இந்தத் "தென்னிலங்கைப் பிரச்சினைக்குப்" பலியானதாலேயே இன்று இந்த அவல நிலையை அடைந்திருக்கிறது என்றே நான் கருதுகின்றேன். இன்று அரசாங்கம் மட்டுமல்ல எதிரணி அரசியல் கட்சிகளும் இந்த "தென்னிலங்கைப் பிரச்சினைக்குள்" சிக்குண்டு கிடப்பதை நாம் உணரக் கூடியதாகவுள்ளது.

நானு இந்தப் பேச்சை முடிக்கு முன்பாக எனது இப்பேச்சில் நான் முன்வைத்த நிலைப்பாடுகள் மூலம் நாம் எதிர்நோக்க வேண்டிய சவால்கள் என்ன என்பதைப் பற்றிச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். சுருக்கமாகக் கூறுவதானால் இது இலங்கையை முழுமையாக ஜனநாயக மயப்படுத்துதல் பற்றிய பிரச்சினையுடன் நேரடியாகத் தொடர்புடைய ஒன்றாகும். ஜனநாயக மயப்படுத்துதல் என்பது சம்பிரதாயபூர்வமான கருத்தில் பராளுமன்றம், தேர்தல்கள், சட்டம், ஆதிக்கம் போன்ற கோட்பாடுகளை மட்டும் உள்ளடக்கியவையல்ல. எமது சமூகத்தில் அரசியல் நிறுவனங்கள், அரசியல் கோட்பாடுகள், சமயநிறுவனங்கள், சமயக் கோட்பாடுகள், கலாசாரத் தனித்துவங்கள், கருத்தியல் உரிமைகள் போன்ற பல்வேறு துறைகளிலும் ஜனநாயக மரபுகளை நிலைநாட்டல் வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். "வல்லிபுரம் தகடு" சம்பந்தமாக சமீபகாலத்தில் அடிக்கடி பிரசாரப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தின் சார்பான புத்திஜீவிகள் மட்டுமல்ல, இப்போது அரசாங்க, ஐ.தே.கட்சிக்கு எதிரான புத்திஜீவிகளும் ஒன்று சேர்ந்து சரித்திர, தொல்பொருள் ரீதியாக யாழ்குடாநாடு. சிங்கள பௌத்த ஒற்றையாட்சியின் ஒரு பகுதி தான் என்பதை ஒப்புவிக்க முயன்று வருகின்றனர். இங்கு சரித்திரத்தையும் தொல்பொருள் காரணிகளையும் திரிபுபடுத்தி கருத்தியல் ரீதியாக இலங்கை சிங்கள, பௌத்த ஒற்றையாட்சியின் கீழுள்ள நாடு தான் என்பதை ஒப்புவிக்க முயலுகின்றமையைக் கடந்த சில வாரங்களாக நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. ஐ.தே.கட்சியிலுள்ளவர்களுக்கு மட்டுமல்ல அதற்கு எதிராகச் செயற்படும் சிங்கள, பௌத்த இனவாத புத்திஜீவிகளுக்கு இன்று சிங்கள, பௌத்த அரசு தொடர்பான கோட்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான சந்தர்ப்பத்தை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளதால் அக்கோட்பாடுகள் மிகவும் ஆர்வத்துடனும், வலிமையுடனும் முன்னெடுத்துச் செல்வதற்கான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே சரித்திர, தொல்பொருளியல், சமூகவியல் காரணிகளைத் திரிபுபடுத்தி, சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிங்கள இனத்துவம் பற்றிய நிலைப்பாடுகளை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை முறியடித்து மாற்றாக இலங்கையில் நிலவிய பல்லின சமூகத் தன்மையை முன்னெடுத்துச் செல்வதற்கும், சரித்திர, தொல்பொருளியல் துறைகள் சார்ந்த அறிஞர்களின் துணையுடன் ஆய்வுகளை மேற் கொண்டு யதார்த்த ரீதியான கருத்துக்களை மக்கள் முன் நிலை நிறுத்துவது மேஜ் போன்ற அமைப்புக்களின் கடமையாகும்.

---

படம் நீக்கப்பட்டு மற்றவர் களின் படம் மட்டுமே அச்சிடப் பட்டன. முன்னெல்லாம் 'கத்தர் பாடல்கள்' என்றுதான் மக்கள் சொல்வார்கள் இன்று நிலைமை மாறி வருகிறது. ஜனநாட்டிய மண்டலி பாடல்கள் எனச்சொல்லத் தொடங்கியுள்ளனர். தமிழ்நாட்டில் சுவரொட்டிகள் அடித்த போது கூட என்னுடைய படத்தோடு மக்கள் கலை மன்றத்தினரின் படந்தான் பெரிதாக அச்சிடப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சுற்றுப் பயணத்தில் நாங்கள் வெறும் விருந்துக் கலைஞர்கள் தான். மக்கள் கலை மன்றந்தான் இந்த நிகழ்ச்சியைத் தயாரித்தளிக்கிறது. மாலையில் நிகழ்ச்சியின் போது நீங்களே இதைக் காணலாம் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முன்பு தோன்றி அதனை ஆங்கிலத்தில் அறிமுகப்படுத்தும் பணி மட்டுமே என்னுடையது.

*லத்தீன் அமெரிக்க நாடுகளின் புரட்சிகர இயக்கங்கள் மக்களைத் திரட்டுவதற்குச் சினிமா ஊடகத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்துகின்றன அருகிலுள்ள கேரளத்தில் 'ஒடெசா' இயக்கங்கூடச் சினிமாவை ஒரு மாற்றுக் கலாசார வடிவமாய் வெற்றிகரமாகப் பயன்படுத்துகிறது. மாபூமி, ரங்குல கலா போன்ற திரைப்படங்களில் ஜனநாட்டிய மண்டலிக் கலைஞர்களின் பங்கேற்பு என்பது ஆந்திரப் புரட்சியாளரின் செய்தியைப் பரப்புவதில் சிறப்பாகப் பங்காற்றியிருக்கிறது. ஆனாலும் தொடர்ந்து அந்த ஊடகத்தை நீங்கள் பயன்படுத்துவதில்லை. காரணம் என்ன?*


சினிமா ஊடகத்திற்கு நாங்கள் எதிரிகள் அல்ல. அந்த ஊடகம் நம் கையில் இல்லை என்பதுதான் நாம் அதைப் பயன்படுத்த இயலாததற்குக் காரணம். சமீப காலமாய் நாங்கள் வீடியோ கேசட்டுகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளோம். நீங்கள் குறிப்பிட்ட அந்த இரு படங்களும் எங்களுடன் இருந்த எங்கள் தோழர் எடுத்தவை. தொடர்ந்து பல வணிகத் தயாரிப்பாளர்கள் வேண்டிக் கொண்டும் நாங்கள் மறுத்து விட்டோம். யாரேனும் சிறு தயாரிப்பாளர்கள் படம் எடுக்க முன் வந்தால் நாங்கள் இயக்க ரீதியாய் முழு ஒத்துழைப்பு நல்கத் தயாராக உள்ளோம். பணம் செலவு பண்ணுவதுதான் எங்களால் இய...

*உங்களின் தலைமறைவு வாழ்க்கை குறித்து ஏதாவது சொல்லுங்களேன்?*

எனது பாடல்கள் யாருக்குத் தேவைப் படுகிறதோ அந்த மலையின மக்களுடன் வாழ்ந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவர்களிடமிருந்து நான் நிறையக் கற்றுக் கொண்டேன். என்னிடமிருந்த கொஞ்ச நஞ்ச மத்தியதர வர்க்க மனோபாவங்களை இனங்கண்டு களைந்து கொள்ளவும் அது பயன்பட்டது. மலையினப் பெண்களும் குழந்தைகளும் என்னிடம் காட்டிய அன்பை என்னால் மறக்க முடியாது. எதிரி எப்படியாவது என்னைப் பிடித்து விடுவதற்கு முயற்சித்தான். நான் அவனை ஏமாற்றினேன். கலாசாரப் பிரச்சினைகள் குறித்து நிறைய எழுதுவதற்கும் இவ்வாய்ப்பு எனக்குப் பயன்பட்டது.

* மாலையில் நிகழ்ச்சி சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்றது. சுமார் 1500 பேர் திரண்டிருந்தனர். கத்தர், சஞ்சில், விேனாத் மூவரும் இணைந்து ஒரு பாடல் பாடினர். மற்றவை அனைத்தும் மக்கள் கலை மன்றத்துடன் இணைந்தோ அல்லது தனித்தோ தான் நடத்தப்பட்டன. சில சிறு நாடகங்கள். சென்ற சுற்றுப் பயணத்தைப் போலன்றி இம்முறை மக்கள் கலை மன்றத் தோழர்கள் ஜனநாட்டிய மண்டலித் தோழர்களுக்கு இணையாகப் பரிணமித்திருந்தனர். காலை முதல் அவர்கள் கடுமையாய் உழைத்துப் பயிற்சி செய்வதை பார்த்தோம். ராமகிருஷ்ணன் போன்ற பழைய பாடகர்கள் தவிர சில நம்பிக்கையூட்டும் புதிய முகங்களும் தென்பட்டன. புர்ரகதா வடிவத்தில் நக்சல் தியாகிகளின் வீர வரலாறு சொல்லப்பட்டபோது மொழியைத் தாண்டிய கலையின் வன்மை விளங்கியது. முற்போக்கு மாணவர் சங்கம் மற்றும் முற்போக்கு இளைஞர் அணி முதலியன அதிகம் பலமாக இல்லாத திருச்சி நகரில், திருச்சி சினி பாரம் தோழர்கள் எந்தவிதப் புரட்சிகரப் பட்டயங்களையும் சூட்டிக் கொள்ளாமல் விடுமுறை எடுத்துக் கொண்டு வந்து இளைஞர் அணி அட்டையைக் குத்திக் கொண்டு உணவு பரிமாறுவது முதல், டிக்கட் கொடுப்பது வரை சுறுசுறுப்பாக இயங்கியது மகிழ்ச்சி அளித்தது. இவர்களோடு மக்கள் கல்வி இயக்கத் தோழர்களும் இணைந்து பணியாற்றினர். இதரப் புரட்சிகர அமைப்புக்களைச் சேர்ந்த தோழர்கள் தத்தம் இதழ்களுக்கு விளம்பரங்கள் அமைப்பதுபோன்ற வேலைகளில் சுறுசுறுப்பாய் ஈடுபட்டிருந்தனர்.

தொகுப்பு : நிறப்பிரிகை



# கலாசாரத் தளையும் பெண்நிலைவாதச் சவாலும்

நிருஷா

கொழும்பு 'மார்கா' நிலையத்தில் மே 5ம் திகதி முஸ்லிம் மகளிர் ஆராய்ச்சி செயல் முன்னணியினரால் ஒரு கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இம் முன்னணியால் நடாத்தப்பட்ட இரண்டாவது கருத்தரங்கு இதுவாகும். கடந்த ஆண்டு ஜனவரி 19ம் திகதி கல்கிசையிலுள்ள Tropic Inn இல் முதலாவது கருத்தரங்கை இவர்கள் 3 நாட்கள் நடாத்தியிருந்தார்கள்.
இக்கருத்தரங்குகள் இரண்டுமே 'தமிழில் எழுதும் பெண் எழுத்தாளர்களுக்கான கருத்தரங்குகள்' என்றே குறிப்பிடப்பட்டிருந்தன. எனவே பல்வேறு இடங்களிலிருந்து தமிழில் எழுதும் பெண் எழுத்தாளர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

இரண்டாவது கருத்தரங்கில் பெரும்பான்மையாக தமிழில் எழுதும் முஸ்லிம் பெண்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இக்கருத்தரங்கில் திரு எம். ஏ நுஃமான், செல்வி திருச்சந்திரன், சாந்தி சச்சிதானந்தம் ஆகியோர் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். இவர்களது கருத்துக்களைத் தொடர்ந்து ஒரு கலந்துரையாடலும் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் போது நடைபெற்ற கருத்துப் பரிமாற்றங்களையும் அவை என்னில் ஏற்படுத்திய தாக்கங்களையும் சுருக்கமாக சரிநிகர் வாசகர்களுக்குத் தருவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

திரு. நுஃமான் 'Cultural Constraints and the Feminist Challenge to creative writing' என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் போது 'பெண்கள் இயக்கத்தில் பெரும் சாதனைகளை ஆற்றாமைக்கு கலாசாரத் தளைகளே காரணம்; ஒவ்வொரு கால கட்டத்திலும் அவ்வப்போது நிலவிய சமூக அமைப்பில் காணப்படும் கலாசாரங்கள் தான் பெண்களை அடிமைப் படுத்தும் காரணிகளில் முக்கியத்துவம் வகித்தவை. புராதன இலக்கியத்தில் பெண்களை சக்தியாக, தேவியாக உயர்த்தி வைத்திருந்த போதிலும் அந்தக் காலகட்டம் ஆணாதிக்க சமுதாய அமைப்பாக இருந்தமையால் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு வந்தார்கள். நிலவுடமைச் சமுதாய அமைப்பிலிருந்து முதலாளித்துவ அமைப்பை நோக்கி சமுதாயம் மாற்றமுற்ற போது ஆணாதிக்கம் தளர் நிலையடைந்து வந்தது. மாறுகின்ற சமுதாய அமைப்பிற்கேற்ப ஏதோ ஒரு வகையில் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

.......பால்ய விவாகத்தை பாரதி வெகுதீவிரமாக எதிர்த்தான். அந்தக் காலத்தில் வெகுவாகக் கடைப்பிடிக்கப்பட்ட இந்தப் பால்ய விவாகமானது பின்னர் சட்ட மூலமே தடைசெய்யப்பட்டு விட்டது. இன்னும் பரதநாட்டியக் கலை ஆரம்ப காலத்தில் கோயில் கலையாக இருந்தது. பரத நாட்டிய மகளிருக்கு மரியாதையும் கௌரவமும் கொடுக்கப்பட்டது. கடவுளுக்கு சேவை புரியும் தேவதாசியாக மதிக்கப்பட்டாள். பின்னர் பிரித்தானியராட்சிக் காலத்தில் இக்கலை முக்கியத்துவமின்றி மெல்ல அழிந்து ஒரு விலைமாதர் சமூகத்தைத் தோற்றுவித்தது. மதிப்பிற்குரியதாக இருந்த பரதக்கலை மதிப்பிழந்தது. கெட்டவள், ஆட்டக்காரி என்ற பெயர்களால் பெண் திட்டப்பட்டாள். பின்னர் சில காலத்தில் ருக்மணி போன்றவர்களால் பரதக்கலை உயர்மட்டப் பெண்களின் அந்தஸ்தைப் பெற்றது. இவ்வாறு தான் எல்லா அம்சங்களும் சமூக அமைப்புக்களின் மாற்றங்களுக்கேற்ப தன்மைகளிலும், அளவுகளிலும் மாற்றம் பெற்றன.

மதக் கோட்பாடுகளில் கூட ஆணாதிக்க நிலைப்பாடுகளே உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. இந்து மதத்தில் திருவள்ளுவரின் திருக்குறளிலிருந்து சகல மதப் பிரசாரங்களும் ஆணாதிக்க அம்சங்களையே கொண்டிருந்தன. இஸ்லாம் மதத்தில் ஆணும் பெண்ணும் சமனல்ல என்பதே கோட்பாடு. ஆனால் இவற்றை விட கிறிஸ்தவ சமயம் சற்று வளர்ச்சியடைந்திருந்தது. திருமணத்திற்கு முன்பான உறவுகள் கூட இங்கு குற்றமாகக் கருதப்படவில்லை.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே பெண்விடுதலை பற்றி பாரதியே முதலில் தீர்க்கமான கருத்துக்களை முன்வைத்தான். பின்னர் வந்த பாரதிதாசன், பெ.ரா, புதுமைப் பித்தன், ஜானகிராமன், ராஜம் கிருஷ்ணன் போன்ற படைப்பாளிகளும் பெண்களின் பிரச்சினைகளை ஆங்காங்கே எடுத்துக் கையாண்டுள்ளனர். இலங்கையில் மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் பவானி என்பவர் சிறுகதைகளை எழுதியிருந்தார். இதுவரை அவரும் அறியப்படாத ஒருவராகவே இருக்கிறார். இவரது சிறுகதைத் தொகுதி ஒன்று 'கடவுளும் மனிதர்களும்' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. இவருக்குப் பின்னர் அம்பை தனது சிறுகதைகளில் பெண்களின் பிரச்சினைகளை, பெண்களின் அடக்குமுறையை வெகுதிறமையாகக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளார்.

கலாசாரத் தளைகள் என்பது சமூக அமைப்பில் நிலவுகின்ற பழைய கலாசார அம்சம் புதிய போக்குகட்குத் தடையாக இருத்தலாகும். கலாசாரத் தளைகளை உடைக்க சமூகமாற்றம் தேவைப்படும். சமூகமாற்றத்தைக் கொண்டுவர சமூக இயக்கங்கள், போராட்டங்கள் தேவைப் படுகின்றன.
'ஆண், பெண் என்ற இன ரீதியில் அமைந்த வேலைப் பிரிவினை' என்ற தலைப்பில் செல்வி திருச் சந்திரன் உரையாற்றினார். அவரது உரையின் போது 'ஆண் பெண் என்று இன அடிப்படையிலேயே கருத்துக்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும். பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினைகள் என்பது Sexual division of Labour என்று கூறப்படுகிறது. Sex பால் அடிப்படையிலும், gender என்ற பதம் கருத்தியல் கொள்கையைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளது.

பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினையானது பொருத்தமற்றது. ஆணுக்கும், பெண்ணுக்கும் பால் உறுப்புக்களில் வேறுபாடு இருப்பதால் ஆண்பால், பெண் பால் என்ற பிரிவு அமைந்தது. இதுவே காலப்போக்கில் ஆணாதிக்க கருத்தியலுக்கு மேலும் வசதிகளை வழங்கி விட்டது. மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் இவ்வாறான வேலைப்பிரிவினை இல்லை. வெவ்வேறு வேலைகளை அவை செய்தாலும்,தொழிற்பாகுபாட்டால் அவை தங்களை கூறுபடுத்திக் கொள்ளவில்லை. ஆனால் மானிட வரலாற்றில் பெண்களின் வேலைகள் மதிப்பிழந்து அவர்களின் பங்கு மறைக்கப்பட்டு வந்துள்ளது. ஆணாதிக்க சமூக தன்மைகள் மேலோங்கி இருந்தமையால் வரலாற்றில் சமூகவியலாளர்களின் ஆராய்வுகளில் கூட பெண்ணின் பங்கு மறைக்கப்பட்டு விட்டது. குரங்கில் இருந்து எழுந்து நடந்த முதல் மனிதனும் ஆணாகவே சித்திரிக்கப்பட்டான்.
இவ்வகையான பிழையான கருத்தோட்டங்களை தூக்கி எறியும் விதத்தில் பெண் நிலைவாதிகள் பலர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர். இவர்களில் பிஷர் (1979), றெய்ற்றர் (1977), லீகொக் (1977) என்பவர்கள் முக்கியமானவர்கள், வரலாற்றில் பெண்களின் பங்கையும், முக்கியத்துவம் இன்றி விடுபட்ட பெண்கள் பற்றிய கருத்துக்களையும் இவர்கள் மீண்டும் உயிர்ப்பித்து வருகின்றனர்.

தற்போது சகல வேலைகளையும் பெண்களும் செய்யும் நிலை இருந்தும் அவளின் வேலை துணையான உழைப்பு அல்லது துணை வருவாயைப் பெற்றுத்தரும் உழைப்பு என்றே கருதப்படுகிறது. வீட்டு வேலையைக் கடமையாகவும், வெளிவேலையை துணைவருவாய் பெற்றுத் தரும் தொழிலாகவும் கருதி பெண் இழிமைப்படுத்தப்படுகிறாள். வர்க்க வேறுபாட்டுக்கு அமையவும் தொழிற்பாகுபாடு அமைகிறது. ஆயினும் வர்க்கம், சாதி சமயம் எல்லாவற்றையும் மீறி பெண்கள் ஆணாதிக்கத்தினாலும், முதலாளித்துவத்தினாலும், பாதிக்கப்படுகிறார்கள். எனவே பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினையை இல்லாதொழித்து சமூகத்தில் நிகழும் அசமத்துவ நிலையை போக்க வேண்டும். இந்நிலைமையினைப் போக்குவதற்கு ஏற்ற விதத்தில் கருத்துக்களை ஊட்டி குழந்தைகளை வளர்க்க வேண்டும். வேலைப் பிரிவினைக் கருத்துக்கள் ஏற்படாவண்ணம் பெற்றோர் கவனமாக இருத்தல் வேண்டும்.

அடுத்ததாக 'கலைப் படைப்புக்களில் பெண்கள்' என்ற தலைப்பில் சாந்தி சச்சிதானந்தம் பேசும் போது, விளம்பரங்களை எடுத்தால் என்ன, இலக்கியத்தை, திரைப் படங்களை, ஏன் வேறெந்தக் கலைப்படைப்பை எடுத்தால் என்ன யாவுமே ஆணாதிக்க நோக்கிலிருந்து படைக்கப் பட்டுள்ளன. இப்படைப்புக்களில் தற்துணிவும், சுதந்திரமுமுள்ள பெண்களைக் காணவே முடியாது. பெண்களின் பாத்திரங்கள், இலட்சியத்தின் வடிவாக அமைந்தாலே படைப்புகள் வெற்றி பெறும் என்ற கருத்து பரவலாக உள்ளது. இயல்பிலேயே பெண் உணர்ச்சி வசப்படுபவள், பொறாமை பிடித்தவள், சிந்திக்கும் ஆற்றலற்றவள், பலவீனமானவள் என்பதே பொதுவான கருத்துக்கள். எங்கும் ஆணாதிக்கம் மேலோங்கி இருக்கும் போது வேறுவிதமான கருத்துக்களை நாம் எப்படி எதிர்பார்க்கலாம்? 1972 இல் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி உலகில் திரைப் படத்துறை, ஒலி/ ஒளிபரப்புத் துறை, பத்திரிகைத் தொழில் என்பவற்றில் பெண்களின் தொகை 30 சத வீதத்திற்கும் குறைவே, இதிலும் 10 சத வீதத்திற்குக் குறைவாகவே முடிவுகள் எடுக்கப்படும் இயக்குநர் மட்டங்களில் பெண்கள் காணப்படுகின்றனர். எனவே தான் ஆண்களின் கருத்தியல் தொடர்ந்தும் பேணப்பட்டு வருகிறது. இவற்றை மாற்றியமைக்க பெண் கலைஞர்கள் தமது படைப்புத் திறனை வளர்த்தல், ஆழமும் தேடலும் உள்ள படைப்புகளை உருவாக்குதல், ஆண்களுடன் சம வேலைவாய்ப்பில் ஈடுபடுதல், தொடர்பு ஊடகங்களில் மாற்றங்களைக் கொண்டு வருதல் போன்ற முக்கிய செயற்பாடுகளைப் பெண்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு உரையின் முடிவிலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அதில் பெண்களது பிரச்சினைகள், பெண்கள் செய்ய வேண்டியவைகள் பற்றிப் பேசப்பட்டன. பெண்களுக்குத் தனியான அமைப்புக்கள் வேண்டும். பெண்கள் அப்போது தான் சுதந்திரமாக வளரமுடியும் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. சமூக எதிர்ப்புக்களை தாண்டி பெண்கள் வளர வேண்டும். எதிர்ப்புக்களை எதிர் கொள்வதற்கு துணிவுடன் செல்ல வேண்டும் என்பன போன்ற பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டன.

உண்மையில், பெண்கள் இன்று நேற்றல்ல, காலம் காலமாக அடக்கப்பட்டு வருகிறார்கள், ஒவ்வொரு சமூக அமைப்பிலும் ஏதோ ஒரு வகையில் தன்மைகளிலும் மாற்றங்களுக்குள்ளாகி பெண்ணடக்குமுறை தொடர்ந்து வருகிறது. பெண்களின் விடுதலை என்பது சில சீர்திருத்தங்களினால் பெற்றுவிடக் கூடிய ஒன்றல்ல. நிலவுகிற ஆணாதிக்கத்திற்குத் துணைபோகும் சமூக அமைப்பின் மீது நடாத்தப்படும் போராட்டம் அதன் கலாசார பண்பாட்டுத் தளங்களில் நடாத்தும் தாக்குதலும் இக்கலாசாரப் பண்பாட்டுக்குப் பதிலியாக எழுந்து வர வேண்டிய மக்களது - சனநாயகப் பண்புடைய - கலாசாரப் பண்பாட்டுப் போக்குகளே பெண் விடுதலைக்கு வாய்ப்பளிக்கும்.

திரு. நுஃமான் அவர்கள் இவ்விடயத்தை போகிற போக்கில் கூறியிருந்தாலும் அதில் ஆழமாக அக்கறை செலுத்தவில்லை. அதற்கான வழிமுறைகளை, பெண்களின் பங்கை வளர்க்கவில்லை. இது அவரது உரையின் குறைபாடாக விளங்கியது. செல்வியும், சாந்தியும் சமூக மாற்றத்தைப் பற்றி அக்கறைப் பட்டதாகத் தெரியவில்லை. புதிய சமுதாய உருவாக்கத்தின் தேவை பற்றியோ, அதில் பெண்களின் பங்கு பற்றியோ, அவர்கள் எதுவும் குறிப்பிடவில்லை. மாறாகத் தற்போதுள்ள அமைப்பில் சீர் திருத்தங்களை ஏற்படுத்துவதால் பெண் விடுதலை சாத்தியம் என்ற கருத்து அவர்களின் கருத்தில் இழையோடியது. கடந்தகால வரலாற்றை எடுத்தோமானால் எத்தனையோ சீர்திருத்த வாதிகள் தோன்றி சீர்திருத்தங்களை செய்திருந்தும் ஏதாவது பெரிய மாற்றம் ஏற்பட்டதா? இல்லை. அடக்குமுறை எங்கு நடக்கிறதோ அங்கு போராட்டம் தேவை. போராட்டம் இல்லாமல் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை. எந்த ஒரு ஆதிக்கவாதியும் தனது வாய்ப்புக்களை, வசதிகளை இலேசாக விட்டுக் கொடுக்க மாட்டான். போராடிப் பெறப்பட வேண்டியதே சுதந்திரம்.

எனவே பெண்களின் விடுதலைக்கு சமூக விடுதலையுடன் கூடவே நாம் கலாசாரம், பண்பாடு போன்ற துறைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வரவும், புதிய பண்பாட்டை உருவாக்கவும் போராட வேண்டும். அந்தப் புதிய பண்பாடு எப்படி இருக்கும்? அந்தக் கேள்வியைத் தான் நாம் இப்போது ஆய்வு செய்ய வேண்டும். இன்றைய பெண் நிலைவாதம் நிலவும் கலாசார பண்பாட்டம்சங்களை எதிர்க்கும் நிலையிலேயே இன்னமும் உள்ளது. அதன் சமூக வேர்களை இனங்காணவும், அதன் மூலம் அதைத் தகர்த்து புதிய பண்பாட்டம்சங்களை உருவாக்குவதற்குமான போக்கில் அது இன்னமும் வளர்ச்சியடைய வேண்டும்.

இந்த சமூக அமைப்பு குறைபாடுடையது. இதன் கலாசார அம்சங்கள் ஏற்கப்பட முடியாதவை. பண்பாட்டு அம்சங்கள் பெண்களை இரண்டாந் தரப் பிரஜை ஆக்குகிறது என்றால் எம் முன்னுள்ள அடுத்த கேள்வி சமூக அமைப்பை எப்படி மாற்றலாம்? இன்றைய கலாசாரம் பிழையானால் புதிய கலாசாரம் என்ன? பண்பாட்டு அம்சங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதே எம்முன்னுள்ள கேள்வி, தற்போது பெண்ணின விடுதலைக்காகக் குரல் எழுப்பும் பெண்கள் இவ்வடிப்படைகளில் தங்களது வேலைகளை வகுத்துக் கொள்வது தான் சரியானதாகும். அதுவே பயனுடையது. அதை விட்டு பெண்ணடிமைப்படுத்தப்படுகிறாள், கணவன் அடிக்கிறான், துன்புறுத்துகிறான் என்று நீண்ட நாட்களாக சொல்லப்பட்டு வந்தவற்றையே திரும்பத் திரும்ப தமது கருத்துக்களிலும் தெரிவிப்பது தற்போது பயனற்றது. இன்றைய காலகட்டத்தில் பெண்கள் தமது அசமத்துவ நிலையை உணர்ந்துள்ளார்கள். ஆனால் அதைக் களைவதற்கான வழி வகைகளை அறியாத நிலையிலுள்ளனர். அவை பற்றி அக்கறைப்படுதலே தற்போது மிகவும் அவசியமானது என நான் கருதுகிறேன்.

இவ்வகையில் முஸ்லிம் மாதர் ஆராய்ச்சி செயல் முன்னணியினரின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. கருத்துக்களை எழுதுவதுடன், பேசுவதுடன் நிற்காமல் செயல் படுத்துவதில் ஆர்வமாக இருக்கும் இவர்களது பணி இன்றைய முக்கிய தேவையாகும். மிகவும் ஆர்வமாகவும், நேர்மையாகவும் பெண் விடுதலைக்கு உழைக்கும் சக்திகளாக நான் அவர்களைக் காண்கிறேன். இம்முன்னணியினர் மேலும் மேலும் வளர்ந்து பெண்விடுதலைக்கு ஆக்கபூர்வமான பங்கை ஆற்றுவார்கள் என்பது எல்லோரது அவாவும் விருப்பமுமாகும்.

---

## தற்பெண்று....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றையும் அரசியல் சித்தாந்திகள், செயல்வாதிகள் (activist) ஆகியோரையும் L.T.T.E. இயக்கம் கிரமமான முறையில் அழித்து வந்துள்ளது.

தற்போது எமது பிரதேசங்களில் ஒரு வலது சாரி சர்வாதிகார அரசியல் ஆட்சி நடைபெறுகிறது. இந்நிலைமையை எதிர்க்கும் தனிநபர்களும் அமைப்புக்களும் அழிக்கப்படுகிறார்கள். வலதுசாரி ஆட்சிகள் வலுப்பெறும்போதெல்லாம் அவ்வை பெண்களை அதிகளவில் அடக்கி ஒடுக்க முயல்வதை நாம் காணலாம். இவ்வகையான நிலைமையில் பெண்களை இயக்கங்களிலும் இராணுவத்திலும் சேர்த்துக் கொள்ளும் முகமாக ஒரு தந்திரோபாயமாகப் பெண் நிலைவாதம் ஆட்சியாளர்களுக்குப் பயன்படுகிறதே யொழிய அது பெண்களை விடுதலை நோக்கி இட்டுச்செல்லப்போவதில்லை. எனவே இந்நிலைமைகளில் பிற்போக்கு ஆட்சியாளர்களின் கருவிகளாகப் பெண்கள் உபயோகிக்கப்படுவார்கள். இதுதொடர்பாகப் பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



குவைத்திலுள்ள எண்ணெய் வயல்களுக்காகவும், பணத்திற்காகவும், வளைகுடாப் பிரதேசத்தில் நாட்டாண்மை அதிகாரத்திற்காகவும் ஈராக்கும், அமெரிக்க கூட்டணிப்படைகளும் மோதியதில் ஈராக் தோல்வியடைய குவைத் அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதும் யுத்தம் முடிந்துவிட்டதாகவே பலரும் நினைத்துக்கொள்ளக்கூடும்.

ஈராக்கிலும், சவூதியிலும் நிலைகொண்டிருந்த சி.என்.என் மற்றும் ஏனைய செய்தி நிறுவனங்கள் மரணங்களையும், அழிவுகளையும் கொம்பியூற்றர் விளையாட்டுகளாகக் காட்டி பணத்தை வாரிக்கொண்டு தங்கள் சாதனங்களை மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்கள்.

இப்போது செய்திகளில் ஓரளவுக்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது குர்திஸ் மக்களின் அவலமும், சதாமின் இராணுவ வெறியாட்டமும். இதுவும் கூட முன்பு நடந்த ஈராக்- அமெரிக்க கூட்டணி யுத்தத்தைப் போலவே திரிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், பூதாகரமாக்கப்பட்டும் தமது நிலைப்பாடுகளுக்கேற்ப் ஏகாதிபத்திய நாடுகளால் பிரச்சாரப்படுத்தப்படுகின்றன.

குர்திஸ் மக்களின் பிரச்சினைக்கு முன் திட்டமிட்டு அமுக்கபட்டுள்ள சில விடயங்களைப் - பார்ப்போம்.

ஈராக் இராணுவம் துரத்தப்பட்டு, அமெரிக்க கண்காணியின் கீழ் குவைத் அதிகாரம் தப்பியோடிய மன்னர் பிரதானிகளுக்கு கையளிக்கப்பட்ட பின் குவைத்திலுள்ள பலஸ்தீனியர்களுக்கெதிராகவும், ஈராக் சார்பாயிருந்தவர்களுக்கு எதிராகவும் கொடூரமான வன்முறைகள் குவைத் அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சங்கத்தின் அறிக்கையின்படி 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட பலஸ்தீனியர்கள் காணாமற்போயுள்ளனர். 500க்கு மேற்பட்டோர் மிருகத்தனமான சித்திரவதைகளுக்குள்ளாகியுள்ளனர். குவைத் அரசபடைகளினால் கைது செய்யப்பட்ட பலர் தூக்கிலிடப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. குவைத் நாட்டுக்கு தங்கள் உடல் உழைப்பை வழங்கிய இலங்கை, பிலிப்பைன்ஸ் மற்றும் ஏனைய ஆசியநாட்டுப் பணிப்பெண்கள் குவைத் அரச படையினராலும், ஆயுதந்தாங்கிய குண்டர்களினாலும் மிருகத்தனமான பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இதைப் பற்றி ஐ.நா.சபையோ, ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர் தொடுத்த ஆக்கிரமிப்பு நாடுகளோ கண்டுகொள்ளவில்லை. எனவே செய்திஸ்தாபனங்களும் இவற்றைப்பற்றி அலட்டிக்கொள்ளாமலிருப்பதில் எந்த ஆச்சரியமுமில்லை!!

ஈராக் மீதான அமெரிக்கக் கூட்டணிநாடுகளின் தாக்குதல்களில் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டது யுத்த காலத்திலேயே தெரிய வந்திருந்தது. விமானத் தாக்குதலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் - கொள்ள பதுங்குகுழிகளுக்குள் ஒளிந்திருந்த மக்கள் கூட அமெரிக்க விமானப்படையினால் மூர்க்கமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

வீடுகள், கடைகள் தரைமட்டமாக்கப்பட்ட நிலையிலும், அங்கவீனமடைந்த நிலையிலும், ஐ.நா.சபையின் தடைகளாலும், போரின் அனர்த்தங்களாலும் உருவான பஞ்சத்திலும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் ஈராக்கிய மக்களைப் பற்றி இன்று யாரும் கவனத்தில் எடுத்துக் கொள்ளக் காணோம். சதாமின் முட்டாள்த்தனமான போரில் குடும்பத்தினரை, உறவினர்களையிழந்தநிலையில், பட்டினியுடன் , சொந்தநாட்டின் இராணுவத்தினாலேயே அடக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஈராக்கிய மக்களின் அவலம் உலகின் கண்களிலிருந்து திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது.

தனது சொந்தநாட்டு மக்களையே எரிமிதித்து அதிகாரத்தை நிலைநாட்டிவரும் சதாம் தனக்கு எதிரான கூட்டணியை எதிர்க்க எந்த ஒரு தார்மீக பலமுமில்லாமல் படுதோல்வியடைந்ததை மறைத்துக் கொள்ள குர்திஸ் இன மக்களை அழிக்கும் நடவடிக்கையிலும், அவர்களை ஈராக்கிலிருந்து முற்றாகத் துரத்தியடிக்கும் நடவடிக்கையிலும் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார். அமெரிக்கக் கூட்டணியை எதிர்க்க பயன்படுத்தப்படாத நேபாம் குண்டுகள், இரசாயனக் குண்டுகள் எல்லாம் நிராயுதபாணிகளான அப்பாவிக் குர்திஸ் மக்களை நிர்மூலமாக்கப்பயன்படுத்தப்படுகின்றன.

உடுத்துவதற்குச் சரியான உடைகள் கூட இன்றி, கால்களில் சப்பாத்து, செருப்புகளுமில்லாமல், சாப்பிட உணவில்லாமல், குடிக்க நீர் இல்லாமல் குர்திஸ் மக்கள் சதாமின் கொலைவெறிக்கு அஞ்சி ஈராக்கைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். துரத்தும் ஈராக்கிய இராணுவத்திடமிருந்து தப்பி, உடலை உறைய வைக்கும் பனியிலும், கரடுமுரடான செங்குத்தான மலைகளில் ஏறி ஈராக் எல்லைகளை கடந்துகொண்டிருக்கிறார்கள் . தப்பியோடும் பத்தாயிரக்கணக்கானவர்களில் மலைகளைக் கடக்கும் ஆபத்தான வழிகளில் பலர் இறக்கின்றார்கள். பசியினாலும், நோயினாலும், குளிரினாலும் தினமும் ஐம்பது, நூறு என்று கைக்குழந்தைகளிலிருந்து முதியவர்கள்வரை இறக்கின்றனர்.

ஆரம்பத்தில் துருக்கி - ஈராக் எல்லைக்கு குர்திஸ் மக்கள் வந்தாலும், பின்னர் பயங்கரச் சரிவுகளையுடைய மலைகளைக் கடந்து சிரியாவுக்கும் ஈரானுக்கும் இப்போது குர்திஸ் மக்கள் தப்பியோடிக்கொண்டிருக்கின்றனர்.

பனையால் விழுந்தவரை மாடேறி மிதிப்பதுபோல, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தப்பிவரும் குர்திஸ் அகதிகளை துருக்கிய இராணுவம் துருக்கி -ஈராக் எல்லையில் வைத்துச் சுட்டுக் கொல்கிறது. வெறும்கண் துடைப்புக்கு குறைந்த எண்ணிக்கையிலான அகதிகளை நாட்டுக்குள் வர அனுமதித்த துருக்கி அரசு பெரும்பாலான அகதிகளை எல்லைகளிலேயே தடுத்து நிறுத்திவருகிறது. இதைமீறி நாட்டுக்குள் வரமுனைபவர்களை இராணுவத்தை ஏவி விரட்டியும், கொன்றும் வருகிறது.

துருக்கியின் இந்த நடவடிக்கைகளை மூடிமறைத்து துருக்கிக்கு ஊடாகவே அகதிகளுக்கான உதவிகளை வழங்கி வரும் ஏகாதிபத்தியங்கள் தமக்கு விசுவாசமான துருக்கி அரசை ஒரு மனிதாபிமான அரசாக காட்ட முனைகின்றனர். ஆனால் உண்மை வேறுவிதமானது.

துருக்கியில் இருக்கும் குர்திஸ் சிறுபான்மையினம் நீண்டகாலமாகவே ஒடுக்கப்பட்டு வருகிறது. இவர்களை ஒரு சிறுபான்மையினமாகவே அங்கீகரிக்காத துருக்கிய அரசு இன, மொழியடிப்படையில் எந்த ஒரு சிறு சலுகையும் வழங்கவில்லை. துருக்கிய பொதுசனத் தொடர்புச் சாதனங்களில் குர்திஸ் இனத்தைப் பற்றி எதுவுமே இடம் பெறக்கூடாது என்பது ஒரு உதாரணமாகும்.

குர்திஸ் மக்களின் விடுதலைக்கென்று புறப்பட்ட குர்திஸ்தான் கெரில்லா இயக்கமான பி.கே.கே. (P.K.K)யை -இது இலங்கையின் புலிகளின் செயற்பாடுகளையொத்த இயக்கம்- தடைசெய்த துருக்கியரசு இந்த இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் தினமும் குர்திஸ் மக்களைக் கொன்றும், சித்திரவதைசெய்தும் அழித்து வருகிறது. 1984லிலிருந்து இதுவரை 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குர்திஸ் மக்கள் துருக்கி அரசபடைகளினால் கொல்லப்பட்டுள்ளனர். 1990இல் மட்டும் ஆகக் குறைந்தது சமார் 800பேர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். இன்னும் ஏராளமான குர்திஸ் மக்கள் துருக்கியின் சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டுச் சித்திரவதை அனுபவித்துக்-கொண்டிருக்கிறார்கள்.

இக்கொடிய அடக்குமுறையைப் பற்றி வாயே திறக்காத ஐ.நா.சபையும், ஏகாதிபத்தியங்களும் தங்களுக்கு எதிராகப் போய்விட்ட சதாமை தனிமைப்படுத்துவதற்காகவே ஈராக்கிலிருந்து விரட்டப்படும் குர்திஸ் அகதிகள் மீது திடீர்ப்பாசம் பொழிகின்றன. 1988 இல் 5ஆயிரம் குர்திஸ் மக்களை ஈவிரக்கமின்றி நச்சுவாயு மூலம் சதாம் கொன்றொழித்தபோது எதுவும் அலட்டிக் கொள்ளாமல் ஆயுத விற்பனை நடத்திக்கொண்டிருந்தவர்கள் இப்போதுதான் குர்திஸ் இனத்தை அங்கீகரி !! அவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்துவை!!! என்று மனிதாபிமானிகளாக மாறி நாடகமாடுகிறார்கள். தங்கள் பாரம்பரிய பிரதேசங்களில்- தங்கள் தேசத்தில்- காலங்காலமாக வாழ்ந்துவந்த குர்திஸ் மக்களை இதே அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியக் கூட்டணிதான் - 1923ஆம் ஆண்டில் துண்டாடி, துருக்கி, ஈராக், ஈரான், சிரியா நாடுகளுடன் குர்திஸ் மக்களை வலுக்கட்டாயமாக இணைத்து அவர்களின் நாட்டையே இல்லாமல் ஆக்கினார்கள். அந்த மக்களை ஒரு துண்டு சொந்த நிலம்கூட இல்லாத நாடோடிகளாக்கிய அதே ஓநாய்கள்தான் இன்று குர்திஸ் அகதிகள் பனியில் நனைகிறார்கள் என்று கண்ணீர் விடுகின்றன.

உலகில் எங்கெங்கு விடுதலைப் போராட்டங்கள் நடக்கின்றதோ அங்கெல்லாம் தங்கள் பாசிசக் கரங்களை நீட்டி நசுக்கும் இந்த ஏகாதிபத்தியங்கள் இப்போது தம்மைக் குர்திஸ் இனத்துக்குக் குரல் கொடுப்பவர்களாகக் காட்டிக்கொள்கின்றன.

"எங்களிடம் எண்ணெய் இல்லை. அதனாலேயே எங்களைப் பற்றி யாருக்கும் அக்கறையில்லை" என்று துருக்கி- ஈராக் எல்லையிலிருக்கும் அகதிகள் கூறுகிறார்கள். பற்றைகளும், கற்களும், கழிவுகளும் நிரம்பிய இடங்களில் கூடாரங்கள் அடிக்கப்பட்டு இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். -30° சி'க்கும் கீழான குளிரில் மாற்றுடையில்லாமல் இந்த அகதிகள் விறைத்துப் போயிருக்கிறார்கள். தினமும் பல குழந்தைகளும், முதியவர்களும் மண்ணுக்குள் புதைக்கப்படுகிறார்கள். நிலத்தில் பரவியிருக்கும் பனித்துகள்களே இவர்களுக்கு குடிநீராகவும், ஆகாரமாகவும் இருக்கிறது.

ஈராக்கிய இராணுவத்தின் நேபாம் குண்டுகளாலும், இரசாயனக் குண்டுகளாலும் பாதிக்கப்பட்டு உடம்பு முழுவதும் எரிகாயங்களுடன் இரத்தமும், சீழுமாக ஆயிரக்கணக்கான அகதிகள் மருத்துவ சிகிச்சைகளின்றி மரண வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தொற்றுநோய்கள் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றன. "ஈராக்கில் குண்டுகளால் சாகிறோம் . இங்கே பட்டினியால் சாகிறோம்" என்று இந்த அகதிகள் கண்ணீர்விட்டழுகிறார்கள்.

துருக்கி-ஈராக் எல்லைப் பகுதியிலிருக்கும் இலட்சக்கணக்-கான அகதிகளுக்கு மேற்கு ஐரோப்பியநாடுகள் வழங்கும் சொற்ப உதவியையும் துருக்கி அரசு அபகரித்துக்கொள்கிறது. "அகதிகளுக்கு மருத்துவசிகிச்சை அளிக்க அரசு எம்மை அனுமதிக்க மறுக்கிறது" என்று அகதிக் கூடாரங்களுக்கு அண்மையிலிருக்கும் எல்லைக் கிராமங்களிலுள்ள துருக்கி மருத்துவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வளைகுடா யுத்தத்தில் தங்கள் ஆயுத உற்பத்திகளைப் பெருக்கிக் கோடி கோடியாகச் சம்பாதித்த ஏகாதிபத்தியங்கள் பின்னர் குவைத்தை புனரமைக்கும் வேலையையும் தாங்களே பொறுப்பெடுத்துக்கொண்டு பணத்தைச் சுருட்டிக் கொண்டிருப்பதைப்போலவே இப்போது ஈரானிலிருக்கும் குர்திஸ் அகதிகளுக்கு உதவி என்ற போர்வையில் ஈரானுக்குள் ஊடுருவ முயற்சிக்கின்றன. தொடர்ச்சியான அகதிகளின் வருகையாலும், பொருளாதார நெருக்கடியினாலும் ஈரானும் இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கக்கூடிய நிலைமையே தென்படுகிறது.

தெற்கு ஈராக்கை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்க கூட்டணிப்படைகள் அப் பிரதேசத்தைப் பாதுகாப்புப் பிரதேசமாக்கி, அகதிகளுக்கான கூடாரங்களையமைத்து வருகிறார்கள். இங்கு தங்கியிருக்கும் அகதிகளுக்கு குடிநீர், உணவை வழங்கிக்கொண்டே தமது வழமையான போதனைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். அத்துடன் சதாமைப் பதவி கவிழ்ப்பதற்கான கிளர்ச்சி-யை மேற்கொள்ள ஆயுதங்களும் வழங்கிவருகிறார்கள்.

யுத்தம் நடக்கும் போது அகதிகளாகத் தப்பியோடுவதும் ஏனைய நாடுகளிடம் தஞ்சம் கேட்பதும் வரலாற்றில் தவிர்க்கமுடியாததாக இருந்துவருகிறது. ஆனால் இதைப்போல விடுதலை போராட்டத்திற்காகத் தஞ்சமடைய முடியாது.

ஓரளவுக்கு இதையொத்த கதைதான் நமது நாட்டில் நடந்தது. இலங்கை இனவெறி அரசினால் தமிழர்கள் அடக்குமுறைக்குள்ளானபோது அவர்கள் மீது அனுதாபப்படுவதாக நடித்துக் கொண்டே இந்திய அரசு தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சிகளும், ஆயுதங்களும், பணமும் வழங்கி அவற்றைத் தன்னுடைய கைப்பொம்மைகளாக்கிக்கொண்டது. தனது அரசியல் நோக்கங்களை இக் கைப்பொம்மைகள் மூலமே நிறைவேற்றும் முயற்சியில் தமிழர்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தைச் சீரழித்து, இன்று தமிழ் மக்களைக் குருதியில் மூழ்கடித்துள்ளது.

இதே நிலமை குர்திஸ்மக்களுக்கும் நேர்ந்துவிடக்கூடாது. சதாமும், இன்றைய ஈராக் எதிர்ப்புக் கூட்டணிகளும் நிரந்தரப் பகையாளிகளல்ல. தமது அதிகாரத்தை எந்தவழியிலாவது நிலைநிறுத்துவதற்கு முயற்சிக்கும் ஒரே வர்க்கத்தின் பிரதிநிதிகளே. இந்த நோக்கத்திற்காகவே இவர்கள் குர்திஸ் மக்களில் அக்கறையுள்ளவர்கள்போல நடித்துக் கொண்டிருக்கிறார்கள். நாளை சதாம் இவர்களுடன் சமரசம் செய்துகொண்டால் இதே குர்திஸ் மக்களுக்கு எதிராக தங்கள் ஆயுதங்களைத் திருப்பிவைத்துக்கொள்ள இவர்கள் தயங்கப் போவதில்லை.

எனவே பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியில் அடக்குமுறையாளன் சதாமின் ஆட்சி சொந்த மக்களாலேயே தூக்கியெறியப்பட்டு மக்களிடம் அதிகாரம் கை மாறவேண்டும்.

குர்திஸ் மக்கள் தங்கள் சுயநிர்ணயத்திற்காகத் தாங்களே சொந்தமாகப் போராடவேண்டும் . இந்தப் போராட்டங்களுக்குத் தலைமை வகிக்க சரியான வழியில், உறுதியான கொள்கைகளுடன் மக்கள் பலத்தில் நம்பிக்கை வைத்து போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய மக்கள் கட்சிகளாலேயே முடியும். மாறாக அமெரிக்கக் கூட்டணிகளினதும் ஏகாதிபத்தியங்களினதும் ஆயுத உதவி, பண உதவி, இராணுவஉதவி போன்ற சதி வலைக்குள் வீழ்வதோ, தவறான தலைமைகளின் கீழ் அணிதிரள்வதோ எந்த விடிவையும் தரப்போவதில்லை. இது இலங்கையில் நாங்கள் கற்றுக்கொண்ட பாடமாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்களக் குடியேற்றங்களின் தன்மைகளும் விளைவுகளும் - 3

3. தமிழ் பேசும் மக்களின் தொடர்புகளைத் துண்டிக்கக் கூடிய வகையில் அவர்களுடைய பிரதேசங்களை ஊடறுத்து செல்லக்கூடிய வகையில் குடியேற்றத் திட்டங்களை அமைத்தல். இதற்கு உதாரணமாக சேருவல தொகுதியையும், பதவியாத் திட்டத்தையும் குறிப்பிடலாம். சேருவல தொகுதியின் அமைப்பினால் திருமலை மாவட்ட, மட்டக்களப்பு மாவட்ட தொடர்புகள் துண்டிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது. பதவியாத் திட்டத்தினால் வடக்கு கிழக்கு இணைப்பு துண்டிக்கப் பட்டுள்ளது.

4. குடியேற்றத் திட்டங்களில் திட்டமிட்டு இனக் கலவரங்களை உருவாக்கல், இதன் மூலம் குடியேற்றத் திட்டத்திலுள்ள தமிழ் பேசும மக்களை அப்புறப்படுத்திவிட்டு அவ்விடங்களையும் தாங்கள் ஆக்கிரமிக்கும் போக்கு தோன்றியுள்ளது. 1956ம் ஆண்டுக் கிடையில் கல்லோயாக் குடியேற்றத்தில் மட்டும் 150 தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டனர்.

## குடியேற்றங்களின் தற்போதைய நிலை :

1970க்கு பிற்பட்ட பகுதிகளில் தமிழ் பேசும் மக்களினுடைய போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தது. 1970 வரை அகிம்சாரீதியான போராட்டங்களில் பங்கு பற்றிய இளைஞர் கூட்டம் அவ் வழிமுறைக்கு அரசு செவிசாய்க்க மறுத்தபோது ஆயுதங்களைத் தூக்கி போராட ஆரம்பித்தனர். 1983 இனக் கலவரத்தின் பின்னர் இப்போராட்டத்திற்கு இந்திய அரசும் மறைமுகமாக ஆதரவளிக்க ஆரம்பித்தது.

தமிழ் இளைஞர்களின் வீரம் செறிந்த தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாத அரசு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு சர்வகட்சி மாநாடு போன்ற தீர்வுகளை முன் வைத்தது. எனினும் அம்முயற்சிகள் தோல்வியடையவே 1985 இல் வட-கிழக்கில் ஒவ்வொரு தென் பகுதி தொகுதியிலிருந்தும் 1000 பேரை குடியேற்றும் திட்டத்தை அறிவித்தது.

"அதாவது இத்திட்டத்தின்படி ஓமந்தை தொடக்கம் ஆனையிறவு வரையுள்ள தமிழ் மக்களது பாரம்பரிய நிலத்தில் சுமார் இரண்டு இலட்சம் சிங்கள மக்களைக் குடியேற்றுவ்தன் மூலம் பிரிந்து வாழ வேண்டுமென்ற வடபகுதி மக்களின் தனிமையுணர்வை நீக்க முடியுமெனவும் சிங்கள மக்களோடு அவர்கள் இரண்டறக் கலந்து வாழ முற்படின் தேசிய வாழ்வில் அவர்களும் பங்குபற்றத் தொடங்கிவிட்டால் தீவிரவாதிகளது நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு இல்லாமல் போய்விடும் என்றும் அரசாங்கம் அறிவித்தது."

இத்திட்டம் பற்றிய அறிவிப்பு வெளிவந்த கையோடு தேசிய பந்தோபஸ்து அமைச்சரான லலித் அத்துலத் முதலி இத்திட்டம் செயற்படுத்தப்படும் விதம் பற்றி அறிவித்தார். அதாவது சிங்களப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தலா 1000 பேர் வீதம் தெரிவு செய்து ஆயுதப் பயிற்சி அளித்த பின்னர் அவர்களை தமிழ்ப் பிரதேசங்களில் குடியமர்த்தி அவர்களின் பாதுகாப்பு நிமித்தம் ஆயுதங்களும் வழங்கப் படவிருப்பதாக குறிப்பிட்டதோடு அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இதற்குத் தேவையான நிதியை பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கினார். இக் குடியேற்றம் பற்றி 1985 பெப்ருவரி 20ம் திகதி பாராளுமன்றத்தில் தமது அரசாங்கத்தின் கொள்கை விளக்க திட்ட உரையில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பின்வருமாறு குறிப்பிட்டார். "நாம் எல்லைப்புறங்களில் குடியேறாவிட்டால் எல்லை எம்மை நோக்கி வரும்."

## [illegible]

சிங்கள குடியேற்றம் தொடர்பான முயற்சிகள் மேற்கொண்டபோது சிங்கள குடியேற்றங்களும் தீவிரவாதிகளின் தாக்குதல் இலக்காக மாறியதால் அரசினால் தனது திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இது தொடர்பாக மதவாச்சி பொலிஸ் நிலையத்தை தாக்கிய எல்.டி.டி.ஈயினர் , இதே போல சிங்கள குடியேற்றங்களும் தாக்கப்படும் என அறிவித்தது அரசினை நிலைகுலைய வைத்தது. அதேவேளை சிங்கள மக்களும் குடியேற்றங்களில் குடியேறுவதற்கு பெரிதும் தயக்கம் காட்டினர்.

இந்நிலைமைகளினால் 1983க்கு பின்னர் எல்லைப் புறங்களில் உள்ள அநேகமான குடியேற்றங்கள் மக்கள் வாழாத பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. இராணுவத்தினர் மட்டும் ஆங்காங்கே முகாம்களை அமைத்து தங்கியுள்ளனர். சில குடியேற்றங்கள் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் பேணப்பட்டு வருகின்றது.

1987 ஜுலையில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இந்திய இராணுவத்தினரால் எல்லைப்புறங்களில் இருந்து இடம் பெயர்ந்த தமிழர்கள் தமது குடியேற்றங்களில் குடியேற்றப்பட்டுள்ளனர். அதேவேளை சிங்கள மக்களையும் இலங்கை அரசு இலங்கை இராணுவத்தின் துணையுடன் அவர்களது முன்னைய குடியேற்றங்களில் குடியேற்றி வருகின்றது. இவ்வாறாக இம் மீளக் குடியமர்த்தல் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதும் எங்கெங்கு குடியேற்றப்பட்டுள்ளனர். எவ்வெவ் எண்ணிக்கைகளில் குடியேற்றப்பட்டுள்ளனர் என்பது போன்ற தகவல்கள் போதுமான அளவு உத்தியோக ரீதியாக வெளிவரவில்லை. இதனால் இம்மீளக் குடியமர்தல் தொடர்பான விபரங்களை பெறமுடியாதுள்ளது. திட்டமிட்ட விவசாயக் குடியேற்ற திட்டங்கள் தவிர ஏனைய குடியேற்ற முறைகளினால் குடியேற்றப்பட்ட இடங்களிலும் மீளக் குடியமர்தல் நடைபெறுகின்றதா? என்ற விபரங்களைப் பற்றியும் அறிய முடியாதுள்ளது. அவ்வப்போது பத்திரிகைத் தகவல்கள் மூலமும் வேறு வழிகளினாலும் கிடைக்கின்ற மாறுபட்ட தகவல்களிலிருந்தும் அது தொடர்பான உறுதியான முடிவுகளை எடுக்க முடியாதுள்ளது.

## மலையகத்தில் குடியேற்றம் :

மலையக பிரதேசங்களான பெருந்தோட்டங்களில் 1830களில் இருந்து இந்திய வம்சாவளி தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். காடுகளாக மண்டிக்கிடந்த மலையக பிரதேசங்களை இலங்கைக்கு வருமானம் தரும் வளம் கொழிக்கும் பூமியாக மாற்றியவர்கள் இந்த இந்திய வம்சாவளி தமிழர்களேயாவர். இவர்களை இவர்களது வாழ்விடங்களிலிருந்து அகற்றும் போக்கு 1940 களிலிருந்து ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது. 1946ம் ஆண்டு இப்போது வெற்றிலையூர் என அழைக்கப்படும் இடத்திலிருந்து உருளை வள்ளி தோட்டத்திலிருந்த 400க்கு மேற்பட்ட இந்திய வம்சாவளி மக்கள் பலவந்தமாக அவர்கள் உருவாக்கிய அத்தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டார்கள்.

இவ்வாறு மலையக தமிழர்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து அகற்றும் போக்கு 1940களில் ஆரம்பித்தாலும், 1970களிலேயே உச்ச நிலையை அடையத் தொடங்கியது. 1970ம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிலச்சீர்திருத்த சட்டத்தை அறிமுகப்படுத்தியபின் தேசிய மயமாக்கல் கொள்கையை அமுலாக்கியதன் மூலமும் மலையக மக்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து அகற்றும் பணியினை மேற்கொண்டது.

இந்நிலச் சீர்திருத்த சட்டத்தின் கீழ் தனிப்பட்ட ஒருவர் நெற்காணிகளில் 25 ஏக்கர் காணியும், சாதாரண காணியில் 50 ஏக்கர் காணியும் வைத்திருக்க உரிமை வழங்கப்பட்டது.

மேலதிகமான காணிகள் யாவும் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், தோட்ட அபிவிருத்திச் சபை (உசவசம) அல்லது ஜனவசம என்ற அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் கீழ் பெருந்தோட்டங்கள் அனைத்தும் தேசிய மயமாக்கப் பட்டன. முதற் கட்டத்தில் 559,377 ஏக்கர் நிலங்கள் தேசியமயமாக்கப்பட்டன.

இவற்றுள் தேயிலைத் தோட்டங்கள் 1,35,760 ஏக்கர்களும் இறப்பர் தோட்டங்கள் 82,944 ஏக்கர்களும் அடங்கியிருந்தன.

தேசிய மயமாக்கலை அமுல் படுத்திய ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏ.டி.ஆர்.ஐ. )என்ற இலக்கமிட்டு அரச தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிய சுற்றறிக்கையில் பின்வருவோருக்கு மாத்திரமே வேலை வழங்கப்பட வேண்டுமென்ற அறிவுறுத்தல் விடுத்தது.

1.தோட்டத்தில் பதிவு செய்துள்ள ஏற்கனவே பிரஜாவுரிமையுள்ளவர்கள்.

2. தோட்டத்தில் பதிவு செய்து, தற்சமயம் அங்கு வசிக்கும் இலங்கைப் பிரஜைகள்.

3. கிராமங்களிலிருந்து தோட்டங்களில் வேலை செய்ய விரும்பும் பிரஜாவுரிமையுடையவர்கள்.

4. தோட்டத்தில் பதிவு செய்துள்ள இலங்கை பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்துள்ளவர்கள்.

இவ் அறிவுறுத்தல் அறிக்கையினால் இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்த ஆயிரக்கணக்கான மலையக மக்கள் வேலையேதுமில்லாமல் தோட்டங்களிலிருந்து விரட்டப்பட்டனர். இதைவிட நட்சாத் திட்டத்தின் கீழும் ஆயிரக் கணக்கான காணிகள் சுவீகரிக்கப்பட்டு அவற்றில் வாழ்ந்திருந்த இந்திய வம்சாவளி தொழிலாளர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு அவ்விடங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். இவ்வாறான சுவீகரிப்பை எதிர்த்து 1977ம் ஆண்டு மே மாதம் 11ம் திகதி தலவாக்கொல்லை டெவன் தோட்டத்தில் நடந்த போராட்டத்தில் சிவனு லட்சுமணன் என்ற 18 வயது இளைஞன் கொல்லப் பட்டான்.

ஐக்கிய முன்னணி அரசை தொடர்ந்து பதவிக்கு வந்த யு.என்.பி. அரசாங்கமும் மலையக பெருந்தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர் அல்லாத சிங்கள மக்களை குடியேற்றுவதில் அக்கறை செலுத்தி வருகின்றனர். இது தொடர்பாக முன்னாள் மாவட்ட அமைச்சராக இருந்து மத்திய மாகாண தேர்தலில் முதலமைச்சராக போட்டியிடப் போகும் டபிள்யு. பி.பி. திசநாயக்கா அவரது பதவியை ராஜினாமா செய்யும் போது பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை கவனிக்கத்தக்கது. "வெள்ளையரால் பாதிக்கப் பட்ட மலை நாட்டு சிங்களவரின் காணிகளை திருப்பிப் பெற்று கொடுப்பதற்காகவே நான் மத்திய மாகாண சபையில் .போட்டியிடுகிறேன். அதற்காகவே பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்கிறேன்" எனக் குறிப்பிட்டார்.

மேலும் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் மூலமும் அதனோடு இணைந்த கொத்மலை திட்டத்தின் மூலமும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்விடங்களிலிருந்து அகற்றப்பட்டு, அவ்விடங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு, வருகின்றன்ர். இத்தகைய குடியேற்றங்கள் திஸ்பனை, சங்கிலிப்பாலம், மாவெல, அட்டபாகை, சங்குவாரி கீழ்ப்பிரிவு, கெட்டபூலா, உலுகல் ஓயா, கடதொர போன்ற இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனை விட வீடமைப்பு திட்டம் என்ற பெயரிலும் பெருந்தோட்ட தொழிலாளர்களின்வாழ்விடங்களில் சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சங்குவாரித் தோட்டம் கீழ்ப்பிரிவு இதற்கு சிறந்த உதாரணமாகும்.

1988ம் ஆண்டு மலையக பிரதேசங்களில் சுவர்ண பூமி திட்டம், கிராம விரிவுபடுத்தல் திட்டம், விசேட காணிச் சட்டம், காணி சுவீகரிப்புச் சட்டம், காணி சீர்திருத்தச் சட்டம் என்பவற்றின் கீழ் 14,710 ஏக்கர் காணியில் குடியேற்றம் நடைபெறவுள்ளது. இதன்படி கண்டி மாவட்டத்தில் 2400 ஏக்கரும், மாத்தளை மாவட்டத்தில் 2600 ஏக்கரும், நுவரெலியா மாவட்டத்தில் 2000 ஏக்கரும் பதுளை மாவட்டத்தில் 2,125 ஏக்கரும் இரத்தினபுரி மாவட்டத்தில் 5485 ஏக்கரும் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக பயன் படுத்தப்படவுள்ளன. இதைவிட சட்ட விரோதமாக குடியேறியர்களுக்கும் அவர்களுக்கான காணி உறுதிகளும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டங்களின் கீழ் பெருந்தோட்டத் தொழிலாளர்களான மலையக தமிழ் மக்களுக்கு அவ்வவ் மாவட்டங்களில் அவர்களின் விகிதாசாரங்களுக்கேற்ற பங்கு கிடைக்குமா? என்பது சந்தேகமாகவுள்ளது. இவை பெருமளவு இலங்கை தொழிலாளர் காங்கிரசிலும் ஏனைய மலையக தொழிற்சங்கங்களிலும் மலையத்தில் வாழ்கின்ற முற்போக்கு அரசியல் ஜனநாயக சக்திகளிடத்துமே தங்கியுள்ளது.

இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களை விட சட்ட விரோத குடியேற்றங்களும் மலையக தமிழ் மக்களின் வாழ்விடங்களில் சிங்கள அரசியல் தலைவர்களின் பின்னணியில் பௌத்த பிக்குமார்களின் துணையுடன் நடைபெறுகின்றன. நுவரெலியா மாவட்டத்திலுள்ள பல இடங்களில் இவ்வாறான குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. உதாரணமாக, டயகமவிலிருந்து தலவாக்கலை வரையுள்ள 15 மைல் பிரதேசத்தில் சிங்கள மக்களை குடியேற்றும் முயற்சி நடைபெற்று வருகின்றது. எதிர்காலத்திலும் இச்சட்ட விரோத குடியேற்றங்கள் நடைபெறாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

குடியேற்றங்களினால் ஏற்பட்ட விளைவுகள் -

1. எல்லைப் புறங்களில் வாழும் சிங்கள-தமிழ் வறிய கூலி விவசாயிகளிடையே முரண்பாடுகள் கூர்மையடைந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் தாக்குவதில் ஈடுபட்டனர். இதனால் சிங்கள தமிழ் உழைக்கும் வர்க்கங்களிடையே உருவாக வேண்டிய வர்க்க ஒற்றுமை என்பது சிதைவடைந்தது.

2. தேசிய இன முரண்பாடு மேலும் மேலும் கூர்மையுற்று அவற்றின் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் சுமுக நிலைக்கு வருவதற்கு குடியேற்றங்கள் தடைக்கல்லாக விளங்குகின்றன ●

'சிங்களக் குடியேற்றங்களின் தன்மைகளும் விளைவுகளும்' என்கிற கட்டுரைத் தொடர் இந்த இதழுடன் நிறைவு பெறுகிறது.
இவ்விதழில் இடம் பெறாத 'தேசிய இருநிலைப் போராட்டம் - ஒரு மீளாய்வை நோக்கி..' அடுத்த இதழில் இடம் பெறும்.
ஆ-ர்

நன்றி - நூலகத்திட்டம்



# சந்திப்புகள்

சந்தர்ப்பவாதிகள், முழுச் 'சந்தர்ப்பவாதிகள்.' என்று ஆத்திரப்பட்டார் அவர். தலையை ஏறக்குறைய முற்றாகவே ஆக்கிரமித்துவிட்டிருந்த நரை தற்போது முகத்தில் தனது தாக்குதலைத் தொடங்கியிருந்தது.

அருகிலே யாருமில்லாத தனிமையில், இடதுகையில் ஒரு பத்திரிகையைப் பிடித்தபடி நின்றிருந்தார் அவர். எதிரிலே யாருமில்லாத போது, நான் அவரை நோக்கி வந்து கொண்டிருந்ததை இன்னமும் அவர் கவனித்திருக்காத போது இப்படி ஆத்திரப்பட்டுத் தனிமையில் யாரைத்தான் திட்டிக் கொண்டிருக்கிறாரோ என்று ஆச்சரியமாக இருந்தது. தனிமையிலேயே திட்டுமளவுக்கு அவருக்கு ஆத்திரம் இருக்க வேண்டும் என்றால் விஷயம் கொஞ்சம் பாரதூரமானதாகத் தான் இருக்க வேண்டும் என்றும் தோன்றியது.

அவரருகாக வந்ததும், நான் வந்திருப்பதை உணர்த்துவது போல 'எப்படி... என்ன தனிமையில் நின்ற அப்படி யாரைத்தான் திட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டேன் நான்.

நான் வந்தது அவருக்கு எந்த ஆச்சரியமும் தரவில்லைப் போல அவரது முகம் இறுகியே இருந்தது. கண்கள் மட்டும் சற்றுக் கோபமாக என்னை விழிப்பதை அவதானித்தேன். அவர் எதுவும் பேசாமல் வெறித்து நோக்கிய தனது பார்வையை மாற்றி வேறெங்கோ பார்க்கத் தொடங்கினார். எனது கேள்விக்குப் பதிலளிப்பதோ, என்னுடன் உரையாடுவதோ அவருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்று தோன்றியது. இருந்தாலும் என்ன? என்னுடன் கோபிக்க அப்படி என்னதான் இருக்கப் போகிறது என்று நினைத்துக் கொண்டு 'என்ன ஒரு மாதிரி? யாரோடு கோபம்' என்று கேட்டேன் நான் திரும்பவும்.

இந்தக் கேள்விக்கு அவரிடமிருந்து 'றெஸ்போன்ஸ்' கிடைத்தது. கோபத்துடன் என்னை நோக்கித் திரும்பி 'உன்னைத்தான், உங்கள் எல்லாரையும் தான்' என்று சீறினார் அவர்.

நான் கொஞ்சம் தடுமாறித்தான் போனேன். கொஞ்சமும் எதிர்பார்க்காத திடீர் தாக்குதல் அது. சமாதான தூது போனவன் மீது கெரிலாத் தாக்குதல் நடாத்தியது போல இருந்தது. என்மீதே ஒரு கெரிலாத் தாக்குதலை நான் உண்மையில் எதிர்பார்க்க வில்லை. ஆனால் ஏன்? ஏனிப்படி அவர் என் மீது ஆத்திரப்பட வேணும்? எந்தக் காரணமும் எனக்கு உதயமாகவில்லை. அவரிடம் கேட்டேன், மெல்லியதாக ஒரு சிரிப்பை வரவழைத்துக் கொண்டு.

'ஏன்... எதற்காக இப்படி ஆத்திரப் படுகிறீங்கள்?"

பதில் சொல்லாமல் அவர் கையிலிருந்த பத்திரிகையை என்னை நோக்கி வீசினார். 'இதைப் பார் புரியும்' என்பது போல. என்னை நோக்கி வந்த பத்திரிகையை பிடிக்கமுயன்று தோற்றதால் கீழே விழுந்த பின் அதைக் குனிந்து எடுத்துப்பார்த்தேன். பத்திரிகை வேறெதுவும் இல்லை. 'சரிநிகர்' தான். திடீரென்று எனக்கு அவர் நான் வரும் போது தனிமையில் நின்று பேசிக் கொண்டிருந்தது யாரையோ அல்ல என்னைத்தான் என்று உறைத்தது. என்னை முன்பே கண்டுவிட்டுத்தான் அவர் ஏசியிருக்கிறார்! நான்தான் வேறுவிதமாக நினைத்துவிட்டேன். ஆனால் எனக்கு இன்னமும் புரியாதது ஏன் இவர் என்மீது ஆத்திரப்பட வேணும்? நிச்சயமாக அது 'சரிநிகர்' பற்றியதாகத் தான் இருக்க வேண்டும். ஆனால் அப்படி என்ன நடந்துவிட்டது? அதுவும் நான் அப்படி என்னதான் செய்து விட்டேன்? வரதராசப் பெருமாள் போல 'சிங்க(ள)க்கொடியின்' கீழ் ஐக்கியப்பட்டு ஒற்றையாட்சி முறையை உயர்த்திப் பிடிப்போம் என்று கொடி ஏற்றினேனா? அல்லது ஆயிரக் கணக்கில் மக்கள் அழிக்கப் பட்டுக் கொண்டிருக்கும் போது அதைப்பற்றிக் கவலைப்படாமல் புலிகளை அழிக்கும் அரசபடையின் யுத்தத்துக்கு ஆதரவு தரவேணும் என்று ஈ.பி.டி.பி. மாதிரி அறிக்கை விட்டேனா? எனக்குப் புரியவே இல்லை. அவரிடமே கேட்டேன். "ஏன் அப்படிச் சொல்கிறீங்கள்?"


கொழும்பிலை இருந்து கொண்டு பேப்பர் அடிக்கிறது பெரிய கெட்டித்தனமோ? சந்தர்ப்பத்துக்கு தக்கமாதிரி எழுதித் தள்ளுறிங்கள் அரசாங்கத்துக்கு வால்பிடிக்கிறமாதிரி" என்று சீறினார் அவர். குரல் முன்பைவிட சற்று உயர்ந்திருந்தது.

எனக்கு மெல்லிய சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டே "அரசாங்கத்துக்கு வால்பிடிக்கிறது அவ்வளவு லேசா என்ன? அது ஏற்கனவே வாயைப் பிளந்தபடி நிக்கிற சிங்கம். போதாதற்கு கையிலை வாள் வேறை. அப்ப எப்படி எங்களால வாலைப் பிடிக்கமுடியும்" என்று எனது நகைச்சுவையைக் காட்டி அவரைச் சமாதானப்படுத்த முயற்சித்தேன். ஆனால் விளைவு எதிர்மாறாக இருந்தது. அவரிடம் இருந்த கோபம் தணிவதற்குப் பதில் ஏறிற்று. இன்னும் சற்று உரத்த குரலில் ஏசினார்...." உதுதான் சந்தர்ப்பவாதம். வசதிக்குத் தக்கமாதிரி அரசாங்கத்தை எதிரி என்கிறதும் பிறகு அரசாங்கத்தில் றெஜிஸ்டர் பண்ணின பேப்பரிலை எழுதித் தள்ளுறதும்.... உங்களுக்குச் சாகிற தமிழ்ச் சனத்தை வைச்சுப் பிழைப்பு நடத்த வேணுமெண்டால் அதை நேர்மையாய் சொல்லுங்கோவன். ஏன் நாடகமாடுறியள்...."

பிரச்சினை வரவர ஏறும் போல தோன்றியது. சமாதான(மான) பேச்சுவார்த்தைக்கு வழியே வராது போலத் தோன்றிற்று. அவர் போகிற போக்கில் 'எந்த நிபந்தனையும் இல்லாமல் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுப்' பேச வர வேண்டும் அதாவது சரணடைய வேண்டும், என்று எதிர்பார்க்கிறார் போலப்பட்டது. இந்தச் சமாதானத்தை எந்த 'அருளரால்' அருள முடியும் என்றும் எனக்குத் தோன்றவில்லை. அப்படி நாங்கள் சரிநிகரில் என்னதான் அரசுசார்புக் கருத்துகளை எழுதிவிட்டோம்? ரஞ்சனையும் ராஜீவையும் கொலை செய்தது புலிகள் தான் என்று எழுதினோமா? அல்லது பிரபாகரன் வந்தால் தான் பேச முடியும் - பிரச்சினை தீரும் என்றோமா? அல்லது யாழ்வைத்திய சாலையில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதாகச் சொன்னோமா? அப்படி என்னதான் செய்து விட்டோம்? என்ன விதத்தில் பிழைப்பு நடத்தினோம்? தமிழ்ப்பகுதியில் யுத்தம் நடக்குது, தமிழ்ச் சனம் சாகுது என்று கூறி சரிநிகருக்கு 'அசேலம்' (asylum) கேட்டோமா எனக்கு உண்மையில் ஒன்றுமே புரியவில்லை. கொஞ்சம் சூடாகிவிட்டிருந்தேன் என்றுமட்டும் தெரிந்தது.

'என்ன பிழைப்பு நடத்திறம்... ஒண்டுமே விளங்கேல்லை. கொஞ்சம் விளக்கமாச் சொல்லுங்கோவன்?' என்றேன் நான்'

"கிழக்கிலை காத்தான்குடி பள்ளிவாசல்லை முஸ்லிம்களை கொன்றது' யார்? கேள்வி வெடித்தது அவரிடமிருந்து.
எனக்கு எல்லாமே திடீரென விளங்கிவிட்டது. பத்திரிகை பற்றியும் சந்தர்ப்பவாதம் பற்றியும் பேசியது எல்லாம்



ஏன் என்று எனக்கு உடனே புரிந்து போய்விட்டது. காத்தான்குடிப் படுகொலைகளும் வடக்குக் கிழக்கில் முஸ்லிம்களை விரட்டியதும் சரிநிகர் கவனமெடுத்திருக்கத் தேவையில்லாத விடயம் என்றதும்; அதைத் செய்தவர்கள் புலிகள் தான் என்ற உறுதியான தகவல்களை அடிப்படையாக கொண்டு சரிநிகர் எழுதினது பிழை, அது அரசாங்கம் செய்தது என்று நாம் எழுதியிருக்க வேணும்...... அதைச் செய்யாததால் தான் நாம் சந்தர்ப்பவாதிகளாய்ப் போனோம்...

நான் மெல்லச் சிரித்தேன்.

"உங்களுக்குச் சரிபிழை முக்கியமில்லை, நியாய அநியாயம் முக்கியமில்லை, அதுபற்றி கதைக்கிற தெல்லாம் சந்தர்ப்பவாதம், கோஷ்டி வாதம், குழுவாதம்.... துரோகம்.... ஆனால் ஒருசில தனி நபர்கள் அல்லது குழுக்களுக்காக ஒரு இனமே தாக்கப்படும்போது அதைச் சிலாகிப்பது தேசிய வாதம்.... தேசபக்தி.... இதுக்கும் சிங்கள இனவாதத்துக்கும் என்ன வித்தியாசம்? உந்த தமிழ் இனவாதத்தினை விட எங்கடை 'சந்தர்ப்பவாதம்' எவ்வளவோ திறம். நாங்கள் சந்தர்ப்பவாதிகளாக' இருக்கவே விரும்பிறம்...,"

இப்படியெல்லாம் பேசவாய் துடித்தது. ஆனால் இதெல்லாம் மூத்த அந்தப் பத்திரிகையாளருக்குத் தெரியாததல்ல, நான் சொலலித்தான் அது தெரியவேண்டும் என்பதில்லை. அவர் எல்லாம் அறிவார்... ஆயினும்....

நான் மௌனமாய் திரும்பி நடந்தேன்.



# ராஜீவ்

12ம் பக்கத் தொடர்...

ஒப்பந்தம் முடிந்தபின்னர் நடந்த காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் பேசுகையில் ராஜீவ் சொன்னார். "இந்த ஒப்பந்தத்தின் சரத்துகளுக்கமைய, இலங்கையானது பூட்டானைப் போல, இந்திய உபகண்டத்தின் ஒரு பகுதியாக வரும்" (இந்தியன் எக்ஸ்பிரஸ் யூலை, 31.) இந்திய பிராந்திய வல்லரசின் நோக்கத்தை மிகவும் தெட்டத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறும் இந்த உரையானது இலங்கையுடனான அதன் உறவின் நோக்கத்தைத் தெளிவாகக் கூறுகிறது. அதுமட்டுமல்ல, இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகக்கூறப்பட்ட ஒப்பந்தத்தின் உண்மை நோக்கம் என்ன என்பதையும் தெளிவாக்குகிறது.

இந்திய அரசின் இந்த ஒப்பந்தம் 'தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பாதி வழிச் சமரசத்துக் குட்படுத்தவும். போராட்ட சக்திகளிடையே குழப்பத்தை ஏற்படுத்தி சுயநிர்ணய உரிமைக்கான தேசியப் போராட்டத்தை சிதைக்கவும் உதவும் வகையில் அமைந்ததால், இலங்கை அரசு, தான் இதற்கு ஒப்புக்கொடுத்தது. தனக்கு மூக்கும் போனதைப் பற்றிக் கவலைப்படாமல், அதை மூடி மறைத்து எதிராளிகளுக்குச் சகுனப்பிழை ஏற்பட்டமையைப் பெரிதுபடுத்திக் காட்டி அரசியல் பிழைப்பு நடாத்தியது! மொத்தத்தில் ராஜீவ் கால இந்தியா மொத்த இலங்கை மக்களிடத்திலும், குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களிடமும் ஆழ்ந்த வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டது.

ராஜீவ் கொல்லப்பட்ட தகவல் வெளிவந்தபோது தலைநகர்ப் பகுதிகளில் வெடி கொழுத்தி சந்தோஷத்தைக் கொண்டாடிய சம்பவங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தது இதையே காட்டுகிறது.

சமாதானப் படை என்ற பெயரில் அனுப்பப்பட்ட இந்தியப்படை வடக்கு கிழக்கு மக்களின் போராட்டத்தையும், உரிமைக்கான அவர்களது போராட்ட நியாயத்தையும் நசுக்கும் கருவியாக செயல்பட்டது. இந்திய ஒப்பந்தத்தை சாட்டாக வைத்து அவர்கள் மீது ஒரு கையாலாகத் தலைமையையும் அதிகாரமற்ற மாகாண சபையையும் திணிக்க முயன்றது....

இவை அனைத்துக்கும் ராஜீவும் அவரது காங்கிரஸ் கட்சியும் திட்டமிடும் மையங்களாக இருந்ததும் தெரிந்ததே.

இது யாருக்குத் தெரியாவிட்டாலும் இந்திய அரசியல் வாதிகட்கும் இலங்கை அரசுக்கும் தெளிவாகவே தெரியும். எனவேதான்-இந்தக் காரணங்கள் இருப்பதால் தான் ராஜீவ் புலிகளால் தாக்கப்பட்டிருக்க வாய்ப்பு இருக்கிறது என அவர்களால் உடனடியாகக் கூற முடிகிறது.

புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் தனிநபர் கொலைகளிலும், இன்னும் இது போன்ற பயங்கரவாதச் செயல்களிலும் வைத்திருக்கும் நம்பிக்கையை மக்கள் மீதோ, அரசியல் போராட்ட வழிமுறை மீதோ வைத்திருக்கவில்லை.

இரண்டும் இரண்டும் நாலு என்ற விதத்தில் இத்தகைய பின்னணியில் இக்கொலைக்கான குற்றச்சாட்டு புலிகளின் தலையில் விழுந்திருக்கிறது.

உண்மை எது என்பதை இன்னும் சிலகாலம் போனால் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

ஆனால் கொலையாளிகள் யாரோ, அவர்களது பயங்கரவாத வழிமுறையானது இத்தகைய அரசியல் பிரச்சினைகளை ஒரு போதும் தீர்க்கப்போவதில்லை என்பதும் இதற்கு சீக்கிய தீவிரவாதிகளின் இந்திரா கொலையே நல்ல உதாரணம் கொலையாளியை தேடிக் கண்டுபிடித்து விசாரிப்பதும், தண்டிப்பதும் கூட இதற்கு ஒரு தீர்வை வழங்கப் போவதில்லை என்பதும் தான் நாம் இவ்விடத்தில் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களாகும்.

இந்தியாவின் பிராந்திய ஆதிக்க வெறி, அதை செயல்படுத்துவதில் காங்கிரசுக்கும் - தலைவர் என்ற முறையில் ராஜீவுக்கும் இருந்த வெறி, உள்நாட்டில் எழுந்துவருகின்ற தேசிய இனங்களின் பிரச்சினைகளை மூர்க்கத்தனமாக கையாளும் அவர்களின் போக்கு என்பன கொலையாளிகள் எல்லா இடங்களிலிருந்தும் உருவாகும் வாய்ப்பு உள்ளதென தெரிவிக்கின்றன. இலங்கையிலிருந்து புலிமட்டுமல்ல, பாகிஸ்தான், பங்களாதேஷ் பகுதியிலிருந்தும் கூட எதிரிகள் கிளம்ப முடியாதென்றில்லை. இந்தக் கொலை ஒரு புலியாக இருந்துவிட்டுப் போகலாம். ஆனால் நாளையே பாகிஸ்தானிலிருந்தோ பங்களாதேஷிலிருந்தோ ஒரு கொலையாளி வரக்கூடும்......

இந்தியா இந்தப் பிராந்தியத்தில் மேலாதிக்கம் மூலம் அமைதியை நிலைநாட்டிவிட முடியும் என்ற கருதும் வரையும், உள்நாட்டில் தேசிய இனங்களின் பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்க்காத வரையும் இது நிலைத்தான் செய்யும்....

அமைதி - இப்பிராந்தியத்தின் உண்மையான அமைதியே - இந்தியாவின் கையில்தான் இருக்கிறது. அவ்வளவுதான் இப்போதைக்கு நாம் சொல்லக் கூடியது. ராஜீவின் மரணத்துக்காக பழிவாங்க நினைப்பதோ, ஒப்பாரி வைப்பதோ தீர்க்காது பிரச்சினையை. இதைப் புரிந்து கொள்வது தீர்த்தலைக்...

நன்றி - நூலகத்திட்டம்



# சரிநிகர்

## ரஜீவ்: நேற்றும் இன்றும்.

கொலை நடப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக எடுக்கப்பட்ட படம் ஒன்றின்படி ராஜீவைக் கொன்றதாகக் கருதப்படும் பிளாஸ்டிக் வெடிகுண்டை வைத்திருந்திருக்கக் கூடியவர் என ஒரு பெண்ணின் படம் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது. இப்பெண்ணின் துண்டிக்கப்பட்ட தலை தனியாகக் கண்டெடுக்கப்பட்டு இவரது சிதைந்த உடலுடன் பொருத்தி உண்மைக் கொலையாளி யார்? என ஆராயும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

இன்னமும் கொலையாளி யாரெனச் சரியாகக் கண்டுபிடிக்கப்படாத போதும், அது விடுதலைப்புலிகளாக இருக்கலாம் என்ற கருத்துப் பரவலாக அடிபடுகிறது. இது தொடர்பான தமது கருத்தைத் தெரிவிக்கும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கவிடம் கேட்டபோது, அவர் 'அத்தகைய சாத்தியம் ஒன்றை நான் மறுக்கவில்லை' என்று தெரிவித்தார். இந்திய தலைவர்கள் மத்தியிலும் அத்தகைய கருத்துக்கள் இருப்பது தெரிகிறது.

1984 இல் இந்திரா காந்தி கொல்லப்பட்ட போது இத்தகைய சந்தேகங்களுக்கு இடமிருக்கவில்லை. சீக்கியத் தீவிரவாதிகளின் திட்டமிட்ட ஒரு செயல் என்பது உடனடியாகவே வெளியாகிவிட்டது. இந்திராவைக் கொன்றவர்களில் உடனே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள்போக, விசாரணையின் போது குற்றவாளியாகக் காணப்பட்டவர் தூக்கிலிடப்பட்டார். அப்போது சீக்கிய தீவிரவாதிகள் இந்திராவின் பிள்ளைகளையும் கொல்வோம் என அறிவித்ததும், ராஜீவின் கொலைக்கு அவர்களால் எடுக்கப்பட்ட முயற்சி ஒன்று பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு தோல்வியில் முடிந்ததும் யாவரும் அறிந்ததே.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை ராஜீவையோ வேறெந்த இந்தியத் தலைவரையோ கொல்லும் எண்ணத்தை அவர்கள் ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை, அத்தகைய முயற்சிகள் நடந்ததும் இல்லை. இந்தியாவில் புலிகள் இருந்த காலத்தில் பாண்டிபஜார் சூட்டுச் சம்பவம், பத்மநாபாவினர் படு கொலைகளைத் தவிர வேறு குறிப்பிடத்தக்க சம்பவங்கள் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக இந்தியத் தலைவர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோருடனான அவர்களது உறவு 'நல்லுறவாக'வே இருந்து வந்துள்ளது.

அப்படி இருக்க, இது புலிகளால் செய்யப்படக் கூடிய ஒன்றாக இருக்கும் என்று பரவலாக அபிப்பிராயம் எழுவதற்கு காரணம் என்ன?

இந்துப்பத்திரிகை தரும் தகவலின்படி படுகொலைக்குச் சில நாட்களுக்கு முன்பு புலிகளின் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் ராஜீவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். தாம் கடந்த காலத்தை மறக்க விரும்புவதாயும், இந்தியாவுடனான தமது உறவை எப்போதும் நல்லுறவாகக் கைக்கொள்ளவே விரும்புவதாகவும் அவர் ராஜீவிடம் தெரிவித்ததாகப் பேசப்படுகிறது. தமிழ் நாட்டில் உள்ள புலிகளின் பேச்சாளரான காசி ஆனந்தன் இந்தியாவுடனான எமது யுத்தம் 'துரதிர்ஷ்டவசமானது இந்தியாவைப் பகைக்க நாம் விரும்பவில்லை' என்று பலதடவை தெரிவித்திருந்தார்.

இந்திராகாந்தி 1984இல் மறைந்த போது வீதிகள் தோறும் அவருக்கு தோரணம் கட்டி அஞ்சலிக் கூட்டங்களைப் புலிகள் ஒழுங்கு செய்திருந்தனர் என்பதும் 1987ல் இந்தியாவில் நடந்த பேச்சுவார்த்தையின் போது ராஜீவ் தமது கருத்தை 'அக்கறையுடனும் அனுதாபத்துடனும்' கேட்டதாகவும், 'தன் மீது நம்பிக்கை வைத்து ஆயுத ஒப்படைப்புக்கு இணங்குமாறு' கேட்டதாயும், 'அவரைத் தாம் முழுமையாக நம்புவதாகவும்' புலிகள் தெரிவித்திருந்ததும் இங்கு நினைவு கூரத்தக்கது.

சமீப காலமாகப் புலிகள், பிரச்சினையில் தலையிடுமாறு இந்தியாவை கோரி வந்ததும் டிக்சித்துடன் பேச மறுத்த போதும் ராஜீவுடனோ பிற இந்திய தலைவர்களுடனோ பேச மறுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கன.

அப்படியானால், இதைப் புலிகள் செய்திருக்கலாம் எனப்பத்திரிகைகள் எழுதுவதன் நோக்கம் என்ன?

பல காரணங்களைச் சொல்கிறார்கள். அவற்றில் ஒன்று; இத்தனை கச்சிதமாக காரியத்தை முடிக்கும் ஆற்றல் புலிகளுக்கு மட்டுமே இருக்கிறது. இன்னொன்று, இவர்கள் இப்படியான செயலைச் செய்வதையிட்டு தயங்குபவர்கள் அல்ல. மூன்றாவது சென்னை பெரம்பூர் பகுதி புலிகளின் நடமாட்டம் அதிக மாக உள்ள பகுதி. நாலாவதும் முக்கியமானதுமான அரசியல் காரணம் இந்தத் தேர்தலில் ராஜீவ் வெல்லக் கூடும், வென்றால் திரும்பவும் எண்பத்தொன்பதிற்கு முந்திய நிலை தோன்றக் கூடும் என்பது. அதாவது புலிகளுக்குக் கட்டோடு பிடிக்காத ஈ. பி. ஆர். எல். எப். போன்ற கட்சிகளை ராஜீவ் முன்நிறுத்துவதுடன் புலிகளால் முன்னர் நிராகரிக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு புத்துயிர் கொடுத்து இலங்கை அரசுடன் சமரசத்தீர்வுக்கு நிர்ப்பந்திக்கலாம். அது புலிகளின் செயலுக்கு இடைஞ்சலாக இருக்கலாம். ராஜீவ் இறந்தாலோ காங்கிரஸ் பழைய சக்தியுடன் வெல்ல முடியாது. வென்றாலும் அதே மூச்சுடன் செயல்பட முடியாது எனப் புலிகள் கருதியிருக்கலாம் என்பது.....

எப்படியோ, இத்தகைய அனுமானங்கள் எவ்வித பிரயோசனத்தையும் தரப்போவதில்லை. விசாரணையும் கொலையாளியைக் கண்டுபிடிப்பதுவும் அவசியம் என்ற போதும் அதுகூட நீண்ட நாட்களுக்கு உதவப் போவதில்லை. இந்திராவினைக் கொன்ற கொலையாளிகளை அழித்தபின்னும் ராஜீவின் பாதுகாப்பு கேள்விக் குரியதாகவே இருந்தது. ஏனென்றால் இது ஒரு விதத்திலும் தனிப்பட்ட விரோதத்தின் அடிப்படையாக வந்த ஒன்றல்ல. இதன் பின்னணியில் ஆழமான அரசியல் காரணங்கள் இருக்கின்றன. அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டாதவரை, அதில் முழு முயற்சியுடன் இறங்காத வரை இத்தகைய நிலைமைகள் இருந்து கொண்டுதான் இருக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, இலங்கையின் இனப் பிரச்சினையை அது தனது பிராந்திய நலன்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டுப் பயன்படுத்தி வந்தது. இலங்கைப்பிரச்சினை முற்றாகத் தீராதவண்ணமும், அதே வேளை அது தன்னுடைய கையை மீறாத வண்ணம் இருக்குமாறும் பார்த்துக் கொண்டது.

யூலை 83 கலவரத்தின் பின் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கட்கு பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து இலங்கையரசுடனான அவர்களின் போராட்டத்தை ஆதரித்தது. அதன் மூலமாக தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. இலங்கையை தன்னிடம் மண்டியிடவைக்க முயன்றது. போராளிகளிடையே பகையை மூட்டிவிட்டும், தனக்குக் கட்டுப்படமறுக்கக் கூடியவர்களை நசுக்கியும் தனது நோக்கிற்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு திரை மறைவில் இலங்கையை மிரட்டி வந்தது.

இந்திராவின் காலம் முடிந்து ராஜீவ் வந்து போதும் இந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படவில்லை. மாறாக, அது இலங்கையை ஆக்கிரமித்து அடிபணியவைப்பதற்கு பதிலாக சர்வதேச ரீதியான அமுக்கத்தையும் இராணுவ ரீதியான மிரட்டலையும் செய்து, இலங்கையின் வான்பிராந்தியத்தை ஊடுருவி தனது ஆக்கிரமிப்பு மிரட்டலையும் செய்து இலங்கை அரசை ஒரு சமனற்ற, மேலாதிக்க ஒப்பந்தத்துக்கு இணங்கவைத்தது. வரலாற்றிலேயே மிகவும் முக்கியமானதும், ராஜீவின் வாழ்க்கைக் காலத்தில் செய்த மாபெரும் சாதனையாகவும் கருதப்படும் இந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் இலங்கையை இந்தியாவின் காலடியில் கைகட்டிநிற்கும் ஒன்றாக்கும் நோக்குடன் தயாரிககப்பட்டது. இந்த ஒப்பந்தம இருக்கும் வரை இலங்கையின் சுதந்திரம் இந்தியா போடும் பிச்சையே அன்றி வேறல்ல.

அண்மையில் இந்தியா, இலங்கை - இந்திய ஒப்பந்தம் இன்னமும் அமுலில் இருக்கிறது என அறிவித்தது இன்னொருவகை மிரட்டல்தான்!

87 ஜுலை 29ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இவ்வொப்பந்தம் இலங்கையையும் அதன் மக்களையும் இந்தியாவிற்கும் அதன் மேலாதிக்கத்துக்கும் கட்டுப்பட்டவர்களாக்கியது. இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை என்று சொல்லப்பட்ட போதும் அதில் 'சமாதானம்' இருக்கவில்லை, மாறாக மேலாதிக்கமே இருந்தது. மேலாதிக்கம் மூலம் சமாதானம் உருவாக முடியாது என்பதற்கு ஒரு குறியீடாகவே ஒப்பந்தம் கைச்சாத்தான அன்று நடந்த அணிவகுப்பு மரியாதை வைபவத்தில்சிப்பாய் ஒருவரால் ராஜீவ் தாக்கப்பட்ட சம்பவம் நடந்தது. இந்தச் சிப்பாய் பின்னாளில் ஒரு தேசிய வீரனாக மக்களால் மதிக்கப்பட்டது தெரிந்ததே!

சஞ்ஜித்

முன்பின் அறியாத, தனிப்பட்ட காழ்ப்பேதும் இருக்க முடியாத சிப்பாய் ராஜீவை தாக்கினான் என்றால் அதற்கு காரணம் என்ன? அது ஒரு அரசியல் காரணம் இல்லையா?

→ 11ஆம் பக்கம்.



சரிநிகர் மாத இதழ் இல 6, அலோசாலை, கொழும்பு 3, இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்திற்குமான இயக்கம் (MIRJE) சார்பில் ச. பாலகிருஷ்ணனால் கொழும்பு 10 லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது
05.06.9